பலமான பூரமது பலங்காலாகும் பாங்கான கெவுரி
யது பலங்காலாகும், நலமான சூடனது பலங் காலாகும்
நாற்றமுள்ள கெந்தியது பலங்காலாகும், சலமான ரச
மது தான் பலங்காலாகும் காந்தமுடன் மதியுப்பு பலங்
காலாகும். சலமான பூநீறு பலங்காலாகும் சார்பான
யிந்துப்பு பலந்தான் கூட்டே. 591

கூட்டியே அறுவகை செயநீர் தன்னுல் குமரவே சரக்
கெல்லா மொன்ருய்க் கூட்டி காட்டிகமாய் தானரைப்
பாய் நாலு சாமம் தகமையுடன் தகடெல்லாம் பூசித்தீரு,
வாட்டமுடன் ரவிதனிலே காயவைத்து வாகாகப்புடம்
போட விபரங்கேளு, நீட்டமுடன் ஓடதனில் தான் பரப்பி
நிலமையுடன் கோழியென்ற புடத்தைம் போடே. 592

போடவே தீயாறி யெடுத்துபாரு பொங்கமுடன் தக
டதுதான் வதரேபோகும், நீடவே குடவனென்ற தகட்டை
தானும் நேர்பாகப் புடம்போட வூரல்போகும், கூடவே
சாக்கதனை கசபங்காக்கி குழம்பாகக் தான் குழப்பி
தகட்டிற்பூசி, சாடவே புடம் போட குடவன் செம்பாம்
சாங்கமுடன் வெள்ளிக்கு தாக்கிடாயே. 593

தாக்குவாய் வெள்ளிக்கு நாலுக்கொன்று தகமை
பெற செம்பதனை கொடுத்துப்பாரு, நோக்கமுடன்
வெள்ளியது வாறு காணும் நொடிக்குள்ளே வாதவித்தை
கைகுளாச்சு, பார்க்கவே மட்டமது சொல்லப் போமோ
பசுந்தங்க மிரண்டுக்கு வொன்றேசேரு, தூக்கமுடன்
தகடடித்துப் புடத்தைப் போடு துளிரான தங்கமது
மிரங்கும் பாரே. 594

தங்க செந்தூரம்

பாரே தானின்னமொரு கருமானங்கேள் பசுந்தங்க
மிரண்டு துலாம் பகர்ந்தெடுத்து; சேரேதான் மாசியென்ற
பத்திரி தன்னுல் செழுமையுடன் ருனரைத்துப் புடத்தைப்
போடு, நேரே தான பத்து முறையோட்டாயானுல் நெடி
தான செந்தூரம் சொல்லப்போமோ, கூரேதான் செந்
தூரங் குன்றியுண்ணும் குணமாகும் மண்டலத்தில் வடிவு
காணே. 595

காணவே தேகமது மின்னல் தோன்றும் கடிதான
ரோகமெல்லா மகன்று போகும், பூணவே தாதுகளும்
வலுத்து காணும் புரையோடுஞ் சில்விஷங்களற்றுப்
போகும், தோணவே நரைதிரையு மாறிப்போகும் தொட
ராது வாயுவென்ற தெண்பதும்போம், மாணவே செந்
தூரம் வெள்ளி செம்பில் மாட்டடா பத்துக்கு வொன்று
போடே. 596

போட்டுமே தானுக்கி யெடுத்துப்பாரு யுகமுடனே
வேதிக்கும் பொன்னே மெத்த, நீட்டமுடன் கரியோட்டி

லூதிப்போடு நிலையானத் தங்கமது கூறப்போமோ,
வாட்டமுடன் தகடடித்துப் புடத்தைப்போடு வளமான
பசுந்தங்கமாகும்பாரு, நாட்டமுடன் சிவயோகிக்குகந்த
பொன்னும் நலமானசித்தர் செய்யும் வேதையாமே. 597

வேதையிலே யின்னமொரு கருமானங்கேள் விதமான
பெரிய கண்ணுகமப்பா போதையிலே வெண்வங்கந்தன்
னேடொக்க புகழான சூடனுடன் கெந்திதானும், தீதை
யிலேகெவுரியுடன் தாரந்தானும் திறமான பூரமுடன்சரிய
தாகும், பாதையிலே யித்தனையுங்கூட்டி மைந்தா பாங்
குடனே குழியம்மிலாட்டிடாயே. 598

ஆட்டவே குமரியுடபாலினுலே அப்பனே யெண்சாம
மரைத்த போது, வாட்டமுடன் சரக்குடனே வங்கஞ்
சேர்த்து வளமான செந்தூரத்தாதியாகும், நீட்ட
முடன் காசியென்ற குப்பிகொண்டு நேர்மையுடன்
சீலையது வேழுசெய்து, மூட்டமுடன் மருந்தெல்லாங்
குப்பிக்கேற்றி முனையான மரக்கல்லால் கொண்டுமூடே.

மூடவே குப்பியென்ற வாயிற்சீலை முயலவேதான்
செய்து முசியா மற்ருன், நீடவே சட்டிதனில் மணலைக்
கொட்டி நினைவாகக் குப்பிதனை நடுவே வைத்து, சாடவே
மேற்சட்டிக் கவிழ்த்து மூடி சாங்கமுடன் சீலையது வலு
வாய்ச்செய்து, போடவே தீயதுதான் சாமம்பத்து புகழ்ச்
சியாய் நீயெரிப்பாய் மைந்தாபாரே. 600

பாரேதனே தீயாறி யெடுத்துப் பார்க்கப் பதமான
செந்தூரமென்ன சொல்வேன், சீரேதான் வெள்ளிசெம்பில்
பத்துக்கொன்று திறமாகத்தானுருக்கி கொடுத்துதீரு,
நேரேதான் கரியோட்டி லூதிபோடு நேர்ப்புடனே தங்க
மது நாலுக்கொன்று, வாரேதான் சேர்த்துருக்கி புடத்
தைப்போடு மகத்தான வேதையிது சொல்லொண்ணுதே.

சொல்லவே சித்தர்செய்யும் வேதைமார்க்கம் செகத்தி
னிலே மானிடர்கள் செய்வாரேதான், பல்லவே கருவாளி
செய்வான்பாரு பூதலத்தில் முழுமக்கள் செய்யப்போமோ,
வெல்லவே காலாங்கிநாதர் பாதம் விருப்பமுடன்ருள்
பணிந்து செப்பலுற்றேன், நல்லதொரு ஞானவானுகவென்
ருல் நானுரைத்த நூலதனையறிவான்காணே. 602

அயக்களங்கு

தானுன பிரகாச மானபோகர் சதகோடி சூரியர்போல்
பிரகாசிப்பார், கோனுன குருவருளால் தன்னைப்பார்த்து
கூறுவேன் யின்னமொரு குருவைக் கேளாய்,
வேனுன அயமது தான் ராவிமைந்தா விபரமுடன் பழச்

சாற்றிலூறவைத்து, வூனை அமுரியினுல் கழுவிப் போட்டு வுத்தமனே யிதில்சேர்க்க மருந்துகேளே. 603

கேளடா அயப்பொடிக்கு ரெட்டி மைந்தா கெணித முடன் துருசுடனே கரமாகும் வாளடா கெந்தகமும் சூடன் வீரம்மார்க்கமாய் யப்பொடிக்கு நாலிலொன்று, கோளடா வாராமல் யெல்லாம்கூட்டி குமுறவேசம்பழத்தின் சாற் ருலாட், காளடாவச்சிரமாங் குகையில் வைத்து கலக் காமல் வுலேயில்வைத்து வூதிடாயே. 604

ஊதிடவே வயமதுதான் சரக்குஞ்சேர்த்து வுண்மை யுடன் செம்பதுவாய் வுரிகிநிற்கும், நீதியாம், அயமது தான் செம்பேயானுல் நிலேத்துதடா வாதவித்தை நிசம தாச்சு, ஆதியாம் அயமதனுல் சகலசித்தும் அப்போதே சித்தியடா தப்போயில்லே, சோதியாங்குருபரந் தன்னரு ளினுலே சுத்தமுள்ள அயத்தினிட செம்பை வாங்கே.

வாங்கியே செம்புநிகர் தங்கம்சேர்த்து வரிசையுடன் தானுருக்கி வைத்துக்கொண்டு, ஏங்கியே திரியாதே மைந்தா நீதான் இன்பமுடன் வெள்ளி செம்பில் பத்துக் கொன்று, ஓங்கியேதானெடுத்து வுருக்கிப் பாரு வுறுதி யாமாற்று பனி ரண்டதாகும், பாங்குபெற சோதிமயம் தன்னைக் காணில் பாலகனே சிவயோகம் பலிக்குந்தானே.

நவக்கோடி சித்தர் வைப்பு

தானுன பொதிகைமலேவைப்புச் சொல்வேன் தாக் கான தென்பொதிகை தன்னிலோரம். வேனுன மடாலய மண்டபந்தான் வெளியான சுனே கரைகளங்குமுண்டு, பானுன வாய்க்கால் மண்டபத்தில் படியோரம் வோரா ளின் மட்டந்தன்னில், கோனுன குருகூட்டம் சித்தர் கூட் டம் கோடானகோடி பொருள் வைத்திட்டாரே. 607

வைத்திட்ட திரவியங்கள் மெத்தவுண்டு மானிலத் தில் சித்தர் வைப்பு யார்தான் காண்பார், கைத்திட்ட திர வியத்தை யெடுக்கவென்றுல் கதவுடனே தாளணைத்து கீலுமாட்டி, மெய்த்திட்ட கரப்பனென்ற காத்தராயன் மேல் வாசல் தனிக்காவல் வீற்றிருப்பான், மைய்த்திட்ட வட புரத்தில் பூதங்காவல் மானிடர்கள் யாரேனுஞ் செல் லார்பாரே. 608

பாரேதான் திரவியத்தையெடுக்க வென்றுல் பராசத்தி கிருபையது பெறவேண்டும், சீரேதானன் னடக்கை கொள்ளவேண்டும் சீர்தப்பி தீவினையை யகற்றவேண் டும். நேரேதான் மனேன்மணியாள் பூசைவேண்டும் நெறி முறை தவருதவருளேவேண்டும், கூரேதான் சிற்பரத்தை நாடவேண்டும் கோடியுகந் தானிருக்க கற்பந்தேடே.

போகர் மூலிகற்பம்

தேடவேகையானின் மூலிதானும் தெளிவான நற் கையான் மூலிகைதானும், கூடவே மேனியிட மூலிதானும் குணமான கஞ்சாவின் மூலிதானும், நாடவே கருவேலி மூலிதானும் நலமான வெள்வேலி மூலிதானும், சாடவே பேய்மிரட்டி மூலிதானும் சாங்கமுடனே விரலியான் மூலியாமே. 610

மூலியாம்தைவேளைத் தழையுமாகும் முயலான கவு தும்பைத்தழையுமாகும், பாலியாம் பாவட்டையினிலேயு மாகும் பாங்கானவா தொண்டைத் தழையுமாகும், சாலி யாம் தும்பையிட யிலேயுமாகும் சார்பான வழுதலேயுமிலே தானுகும், வேலியாம் பருத்தியுட மூலிதானும் வேரான கொடிவேலி தழையுமாமே. 611

தழையான சங்கனிட மூலியாகும் தாக்கானபுங்கனிட மூலியாகும், மழையான பேய்ச்சுரையாய் பனிநாக்கோடு மகத்தான பாறசுரண்டி னிலேதானுகும், குழையான கொள்ளுக்கா மூலிதானும் கோடான சுழிமூலி நிலேதானு கும், இழையான யிண்டிலேயு யுனிலேயுமாகு மெழிலான கோரையிட யெலேயுமாமே. 612

இலேயான விஷமூலியெலேயுமாகு மெழிலான பம்பை யுடபொன் முசுட்டை, தலேயான பரட்டையுட மூலிதா னும் தனியான குணமூலி வெளிச்சிமூலி, கலேயான நக்கி யென்ற மூலிதானும் கடிதான பற்பாட மூலிதானும், வலே யான சின்னியிட மூலிதானும் வகுப்பான குறுந்தொட்டி மூலியாமே. 613

ஆமேதான் செந்தொரா மூலிதானும் அப்பனேகரு வாலி மூலிதானும், போமேதான் விழிமிரட்டி மூலிதானும் வெடிப்பான காந்தியுட மூலிதானும், வேமேதான் மலே தாங்கி மூலிதானும் போக்கான சிறுதும்பை மூலிதானும், தாமேதான் தீக்கோட்டான் மூலுதானும் தாக்கான சூரிய யென்ற மூலிபாரே. 614

பாரேதான் தாக்காளி கொன்றைமூலி பாங்கான வெண்ஞெச்சி யிலேயுங்கூட்டு, சீரேதான் குட்டி விளா மாவின் கொன்றை சிறப்பான கூர்மல்லிபாளைதானும், நேரேதான் செவ்வல்லி பத்திரிதானும் நெடிதான வெள் ளல்லி பூலிதானும், கூரேதான் பிரமராட்சதையுங் கூட்டி பேரான நற்றும்பை தானுங்கூட்டே. 615

கூட்டியே ரவிதனிலே காயவைத்து குறிப்புடனே யொவ்வொன்றும் பொடியாய்த்தெள்ளி, தாட்டிகமாய் சர்க்கரைதான் சமனுய்சேர்த்து சார்புடனே நெய்தேனிற் கொண்டாயானுல் வாட்டமுடன் சேத்துமங்கள தொண்

ணூற்ருறும் வாகானவாயுவென்ற தெண்பதும் போம்,
தேட்டமுடன் பித்தமென்ற நாற்பதும்போம் தெளிவாகும்
திரேகமது யிறுகுங்காணே. 616

காணவே தேகமது கற்றூணுகும் கருவான நரம்பு
களுமுறுக்கிக் காட்டும், தோணவே சதாகாலமிருக்கலா
கும் துன்பமென்ற சாகரத்தைவிட்டொழித்து, மாணவே
சதாங்கித்தம் பூசித்தேதான் மகத்தான கெவனமுதல்
கொள்ளலாகும், வேணவே சமாதியிலே யிருக்மலாகும்
வெகுகோடி காலமட்டும் தேகம்போமோ. 617

போகாது கற்பாத்திரகால மட்டும் பொலிவான தேக
மது யிரும்பு போலாம், வேகாதுசடந்தானும் தீயில்தானும்
விருப்பமுடன் கோடி யுகங்காணலாகும், சாகாது பூமி
தனில் யிருந்துகொண்டு சதா காலம் வாமியைத்தான்
பூசிப்பாய்நீ, ஆகாது லோகமென்ற மாய்கை நீக்சி வப்
பனே யெனைப் போலயாகுவீரே. 618

அபினிவைப்பு

ஆகவென்ருலின்னமொரு கருமானங்கேள் அப்பனே
வபினியென்றவைப்பு சொல்வேன், பாகமுடன்கடுகுடனே
கசகசாவும் பாங்கான கஞ்சாவும் சரியாய்த் தூக்கி, வேக
முடன் மராட்டியமா மொக்கு தானும் விசையுடனே கியா
ழமது செய்துகொண்டு, தோகமுடன் சரக்கதனை யரைப்
பாய்மைபோல் தொவுரதனைதான் போக்க முறைதான்
கேளே. 619

கேளே நீசினமென்ற வெல்லந்தன்னை கிருபையுடன்
பாகுபதஞ் செய்துகொண்டு, கோளேதான் வாராமல்
மைந்தா கேளு கொப்பெனவே சரக்கதளை கிளறிக்
கொண்டு, பாளேதான் போகாமல் மெழுக்கெடுத்து பான்
மைபெற பரணிதனில் பதனம் பண்ணு, தாளேதான்
பிணியது சொல்லப்போமோ தாரணியில் மானிடர்கள்
பிழைக்கத்தானே. 620

தாஞன வபினியது மயக்கமெத்த தாரணியில்நாதாக்
கட்குகந்த போதை, வேஞனயிடுமருந்து பாஷாணந்தான்
மிக்கான புத்திதனை மயக்கப்பண்ணும், கோஞன குரு
வருளாலிந்த பாகம் குணமாகப் பாடி வைத்தேன் மாங்
தர்க்காக, தேஞன் காலாங்கித் தன்னைப் போற்றிதேற்ற
முடன் சதாகாலம் தவத்தில் நில்லே. 621

போகர்வுப்புமணி

நில்லவே போகரிட மணியைக்கேளு நிலையான மணி
யதுவும் சித்தர்வேதை, புல்லவே சாகரத்தின் சுலேமயா
கும் போக்கான படிரண்டு வளந்துவாரு, கொல்லவே
சேர்த்துப்பு படியேயாகும், குணமான வலையலுப்படியே

யாகும் வெல்லவே விதுரண்டும் பொடியதாக்கி மேன்மை
யுடன் காச்சும்வைக செப்பக்கேளே. 622

செப்பவென்ருல் சலந்தனிலே வுப்பைக் கொட்டி
சீலமுடன்தான் கரைத்து தெளிவை வாங்கி, ஒப்பமுடன்
சீலையது வேடுகட்டி வுத்தமனே அடுப்பேற்றி யெரிப்பா
யப்பா, தெப்பமுடன் நீரெல்லாம் சுண்டியேதான் தெளிவு
பெற வுப்பதுதான் வட்டுபோலாம், நெப்பமுடன் தானி
ருக்கும் வுப்பைத்தானும் நேர்ப்பாக சுரண்டியதை
யெடுத்திடாயே. 623

எடுத்துமே மறுசட்டி தானெடுத்து யெழிலான கடல்
சலந்தான் படிரண்டப்பா, தொடுத்துமே மறுபடியும்
வுப்பைக்கொட்டி தொடரவேதான் கரைத்து வடிதான்
கொண்டு, விடுத்துமே மேற்கவசம் சீலைகட்டி விருப்ப
முடன் ருனெரிப்பாய் சுண்டமட்டும், கொடுத்துமே
தானிறக்கி யெடுத்துப்பாரு குடிலமுடன் வுப்பறுதான்
கரடுமாமே. 624

கரடான வுப்பதனை யெடுத்துக் கொண்டு கருத்
துடனே மறுசட்டி கடற்சலந்தான், பிரட்டாதே பின்னு
மந்த சட்டிக்குள்ளே பேரான கடற்சலந்தான் படிரண்
டிட்டு, வரட்டுடனே வுப்பையெல்லாம் சீவிவாங்கி
வளமாக கடல்சலத்தில் கரைத்துக்கொண்டு, திரட்
டுடனே வடிகட்டி யெடுத்துக்கொண்டு தீர்க்கமுடனடுப்
பேற்றி யெரிப்பாய் நேரே. 625

நேரானவுப்பை யெல்லாஞ் சுரண்டிவாங்கி நேர்ப்
புடனே மறுசட்டிதன்னிற் போட்டு, கூரான தீநெருப்பில்
யெரிக்கும்போது குணமுடனே வுப்பெல்லாம் வுருகிக்
கட்டும், பேரான வுப்பதுவும் வயிரம்போலாம் பெரிதான
வயிரமதை எடுத்துக்கொண்டு, சேரான மண்ஞனை சட்டி
தன்னில் தெளிவுடனே காய்ச்சியல்லோ மூசைக்கேற்றே.

ஏற்றவே வுப்பதனை மூசையிட்டு யெழிலானதன்
பதத்திலிருக்கித்தீரு, போறற்வே கருகட்டி சிலைதான்
வார்ப்பாய் புகழான சிலையதுவும் பாய்ந்தபின்பு சீற்ற
முடன் சிலையதுவுஞ் சாரணிப்பாய் சிறப்புடனே மேனி
எனுங் குப்பைமேனி, தேற்றமுடன் சார்பிழிந்து காய்ச்சி
தோய்ப்பாய் தேர்மையுடன் சிலையதுவு மிறுக்கும் பாரே.

பாரேதான் சிலையதுவு மிறுக்கிக் காட்டும் பாங்கான
லிங்கமுடன் துருசுதானும், சீரேதான் கெந்தியுடன் தாரந்
தானும் சிறப்பான சூதமுடனிடையாய்ச் சேர்த்து, வேரே
தான் முலியது விராலிதானும் வேகமுடன்ருன் பிழிந்து
சரக்கை மைந்தா, கூரேதான் மைபோலரைத்து பின்பு
குணமான மருந்தை யெல்லாஞ் சிலையிற்கேற்றே. 628

சிலையானவுப்பினிட கெடையை மைந்தா சீர்பெறவே கவசித்துப் பூசிப்பின்பு, மலையான வோரமதில் தானே பூர்க்கு மகத்தான பூநீறு கவசஞ்செய்து, குலையான சித்தர் முனிரிஷிகளில்லாக் கொலுக்கூட வனந்தனிலே புடத்தைப்போடு, விலையான் வுப்பதுவும் சிவத்துமேதான் விண்ணுலகந்தான் மதிக்கு மதீதம்பாரே. 629

அதிதமாங் கெதையதனை யெடுத்துமைந்தா அழகு பெறகுகை வீட்டில் பதனம்பண்ணு, துவிதமுடனுந்த னுக்கு வறுமை வந்நால் துடியான கெதையதனை சீவி மைந்தாநதீதமுட ன் செம்பதனில் நூற்றுக்கொன்று நாட் டிடவே மாற்று பனிரண்டதாகும், பதியான சித்தர்முனி செய்யும்வேதை பாருலகில்யார்செய்வார் நம்பிடாதே. 630

சன்னிக்கு சுடரெண்ணை

நிம்பயெண்ணை படியாழாக் கரண்டியிட்டு நினைவாக வெள்ளுள்ளி தாரங்கொஞ்சம், தெம்புடனே விட்டெரித் துச் சூடுகண்ட திறமான பருவமதில் சிரசிலுற்று, துன்ப மது சன்னிதனிற் பிரட்டல்போகுந் துடிப்புள்ள சலவை களுஞ் சொல்லாதோடும், நம்பியிட்டா பயிர்போலே நலம தாகும் நாதாந்தமாக போகர் நவின்றிட்டாரே. 631

விஷபேதிக்கு

கருத்துடைய மானிர்க்குப் பேதிகண்டால் கைக்கடங் கப் பிடியெடுத்து முளகாய்தன்னை, இருத்தியரை வெண் ணைபோல் மூளைதன்னி லிதமாகப் பதித்திட்டுப் பின்பு நீயும், பொருத்தமுள்ள வன்னிபற்ப முடனேதாக்கு பேருலகிற் சன்னியற்றுப் பிழைப்பார்பாரு, வருத்த மில்லை கைகண்ட தொழிலுமாகும் வண்மையாய்ப் போக முனி வழுத்தினரே. 632

பேதிகண்ட வுடனேதான் பத்துஒத்து பேதமிலா வாக்கிருணம் கலிக்கம்பற்பம், நீதியாய் மாத்திரைக ளன்னப்போக்கு நிலையாக வொருநாளிற் செய்து கொள்ளு, சோதிபெற நாளிரண்டிற்செய்ய வேண்டாஞ் சுருக்கிலே குளுமைவந்து முடிப்போகும், நாடிதானில்லாம லுயிரும்போகும் நலமானபோகரிஷி நவின்றவாரே. 633

நிம்பயிலை யிடையெட்டு வுரலிலிட்டு நேசயிடி பாணி ரெட்டி சாலிலிட்டு, தம்பமற வெட்டிலொன்ருய்க் காச்சிக் கொண்டு தனையெடுத்து கிட்டிகட்டிப் பிழிந்துதன்னை, நிம்பயிடு அரன்பீசப் பலமுமஞ்சு நிரம்பிட்டு ஒட்டியெரிக் குழம்பதாக, நம்பியெடு கல்வமிட்டு அரைநேர் சாமம்நாடி யெடுமெழுகாகும் நாட்டுளோர்க்கே. 634

எண்ணை

ஈரவெங்காயமது கழர்ச்சிக்கொட்டை யிலையிடித்து இரண்டெடையும்படியுமிட்டு, காரமுள்ள முத்தெண்ணை படியுமொன்று கருத்தறிந்த தந்திவிரை பலமுங்கால் தான், கோலமுள்ள ரசமெழுகு பல முங்கால்தான்கூட்டி யெரிவடிகட்டிப் பூசைசெய்து, பாரமுள்ள யெண்ணையது பணமும் வீதம் பாச்சிடநோய்தீரும் பரிசுகேளே. 635

பாரிந்த யெண்ணைதனை மூன்றுபோது பாச்சிடவே பாரிசமாஞ் சூலையெல்லாம், சாரியந்தப்படியோடு மேக மெல்லாந் தாக்கி நெய்யடி படுங்காண் மகோதரங்கள், கூறிந்தப்படிபோகும், வாதமெல்லாங் கொள்ளையது கொண்டப் போலோடிப் போகும், சொரிந்தமேகவெட்டை நீர்களெல்லாஞ் சுவரிடுங்காண் வாயுவெல்லாம் சூட்ச மாமே. 636

சுவறிடுங்காண பௌத்திரங்கள் மூலரோகஞ் சொல் லிய நீரும்பலதுடிகள் போகும், கவறது போலாகிவிடு மெண்ணைப்போக்கு கைகண்டு போகரிஷி கருத்தில் வைத்து, தவறிடா தெனககுரைத்தார் லோகத்தோர்கள் தான் பிழைக்கச் சொன்னதிந்த மார்க்கந்தன்னை எவரிடத் தில் சொல்லாதே புளிப்புதள்ளு இனமாகவுண்டவர்க்குப் பிணிகள் போமே. 637

காரிநாகபந்தம்

காரியெடைசேர்த்துமே கூடச்சேர்த்துக் கரண்டி யிட்டு யிலுப்பைநெய்யி லுருக்கிமெள்ள, சாரியிட்டுப் பத்திரண்டு தரமுங்காச்சி சரியரவே கரண்டியிட்டுவுருக்கி மெள்ள, கூறியதோர் சூதமிட்டு வுருக்கத்தானே நாற்ற மற முன்னெண்ணை நிறையவிட்டு, பாரியிது பத்துமது யெரிய விட்டுப் பாகமது யெடுத்து நிறையிடை போகாதே 638

போகாதே அன்னமிட்டு வுடைத்து அன்னம் பூட்டி யரைவில்லை கட்டுகிடத்திலிட்டு, பாகமா யெரித்திடவே யுயரவேறிப் பார்த்திடவுமெடுத்து வைத்து மடியில்நின்ற தாகமாய் வில்லையரை சோறுவிட்டுத் தாக்கியே வில்லை கட்டிப் புடமூன்றிட்டால், நாகமாம் வில்லையது சிவந்து போகும் நாதாக்கள் சொன்னதிந்த நாட்டந்தானே. 639

எறிகின்ற சூதமிடை புகைநீர்விட்டு எரியழலிற்ற பன்னிடம் வைத்துப்பாரு, கூறியதோர் காளாஞ் சிவந்த வில்லை கூட்டியரைசுடமிட்டு எரிநேர்ப்பாக, மாறியெடு சிவந்து நிற்கும் ரவியில்நீறு மயமாகத் தாக்கிடவே யொன்றதாகப், பாரியது ஏமமது பத்துமார்கும் பாலித்தா ரிஷிபோகர் பண்பதாமே. 640

தேனிலிடு சகலநோயெல்லாந் திருஞ்செங்கதிருமேனி யது இரும்புபோலாம், வானிலே யிப்பாகம் பொய்யோ வென்ருல் வண்மையுள்ள ஆண்டவனும் பொய்யதாகும், ஞானிகளுக்கிவ்வேதை யெறக்கமிட்டு நாட்டிலுள்ள நல்லவர்கள் செய்துகொள்வார், கூ று நீ மி ரு தவர்கள் செய்யமாட்டார் கொட்டிரைமெய்போகர் குணமிதாமே.

மகோதிரத்துக்கு

வீரமுடன் பதங்கபற்பம்பலமும்ஞலு வீ த மி டை மிளகு சுக்கு தந்திகூட்டி, பாரமுள்ள நெல்லிமுள்ளி கடுக்காய் நேருய் பார்த்து அரைபுகை நீருற்சாமம்ரண்டு, கோரமதாயுத்தி யளவாகவுண்டை கொடுத்து விடுமகோதரங்கள் முப்பத்தொன்றும், நேரமில்லையோடி விடு நிமிஷந்தன்னில் நிச்சயமாம் போகரிஷி நேர்சொன்ஞரே.

நல்லிரும்பு வோடையாஞ் செம்புநேரே நாட்டியரை பொடியாக குகையிலிட்டு, மெல்லவதை யுருக்கிவிடபுட்டு போகலாம் விரும்பியெடுரண்டு முக்கால் நாத்தஞ்சூடன் செல்ல, நிறுவிரண்டுமரை நிறுத்திக் கொள்ளு சிறுகவது வீரமது தயிரண்டுகாலம், சொல்லவிந்தவைந்துடனே நிறுத்துக் கல்வஞ் சுறுதியுடன் பாணிவிட்டு அரைத்துக் கொள்ளே. 643

அரைத்து வில்லையங்கியிடு பத்துந்தூமம் அதின் பேரு சுயமக்கினி யதைநிறுத்து, வரைத்து பலமொன்று நிறுவேலிவேரு வகைக்கடுகு ஓமமொடு சிறுதேக்காகும், நிறுத்து எடு ஆனைத்திப்பிலியிந்துப்பு நேரான கோஷ்டமொரு வகைக்குவொன்று, அரைத்து நிறுகாயங்கால் வசம்புகாலாங் குணமானகடுகுபொடி அரையும்போடே.

அயக்கந்த லேகியக்குளிகை

சங்குநிறம் நீறியதோர் சீனச்சுன்னஞ் சாதகமாயெடுத்து நேரே துடிசாற்றக்கேளு, இங்கிதமாய் வன்னிரசம உப்பிலிட்டு இதமாகயெரித்திடவே பதங்கமேறும், துங்கவதையெடு நிறுத்துமுன் சுன்னவைத்துசுகமாகச்சேர்த்து கல்வமீதிலிட்டு, சங்கைபடப்பழச்சாற்ருற் சாம மாட்டிச் சதுருக்கிடத்திலிட்டு மூடிக்கேளே. 645

மூடியதைச் சீலைசெய்து எரிநால்சாமம் முத்தியதையெடுத்து மண்டலமேயுண்ண, கோடியது நோயெல்லாங் குஷ்டம் போகுங் குணமாகும் வாதவெடி சூலைபோகும், நாடியது மஹோதர மும்பதாகும் நாட்டிலுள்ள நீரிழிவு நடுங்கியோடும், வாடிமுகங் கனலில் கண்டவிருள்போலாகும் வகையாக போகரிஷி சொன்ஞர்தோமே. 646

பாஷாணக் கட்டு

வச்சிரத்தின் பாலாழாக்குப் பீங்கானிலிட்டு வசமாக முற்றி வெள்ளைக்கரு நேரிட்டு, தச்செயலாய்த் திரிநால் வைமுரிந்து நீராந் தகைமைபெற எலிகொல்லி யோட்டிலிட்டு வைச்சபடி முன்னீரால் சுருக்குயிட்டு வகையாக நாற்சாமம் போட்டுத்திரு, உச்சிதமா யண்டமென்ற சுண்ணங்கட்டி யூரறியப் புடமிடவே கட்டுந்தானே. 647

கட்டுகின்ற பாஷாணங் கரியிலாடுங் காதலாயெடுத்ததைவைத்துக் கொண்டு, வெட்டுநீ வெள்ளீய நூற்றுக்கொன்று விரும்பியிடு ரசிதமா நீர்களற்று, தட்டுநீ நாதம் வரும் கடையில்விற்று தகமையுள்ள ஞானத்தைத் தரித்துக்கொள்ளு, பட்டுநூற் சாயம்போற் பாகம்பாரு பதிவான போகரிஷி பாலித்தாரே. 648

சடைக்கஞ்சாய் நூறுசட்டியிட்டுச் சலம்விட்டு திரிநாள் வையலம்பிவாங்கி, திட்டமாக பின்னுமொரு சட்டியிட்டுச் சீருவின் பால்படியும் பாணிநேரே, விடையாக விட்டெரி நீக்கோணியிட்டி விதமாகப் பிழிந்துரசமாக்கிப்பின்பு புடமிட்டு ஆவினெய் சிறுகவிட்டுக் கிருபையாய் வைத்துநீ பகரக்கேளே. 649

சக்கரையின் சுக்கேல பிளகுமாஞ்சி சாதிக்காய் பத்திரியுங் கிரும்பு கோஷ்டம், மிக்க அதிமதுரமுடன் அமுக்கருவும் விதமான வால்மிளகு கசகசாவும், தொக்கவகை பலமிரண்டு தட்டியிட்டுச் சுருதியெனும் பரலிலிட்டுப் பாகாயக்காச்சி, பக்கமுள முன்ரசத்தை யதிலேயிட்டுப் பாகமாயிறுகபதம பார்த்துக்கேளே. 650

பார்த்தெடு நீசாருயங் தேனுமட்டுப் பதமாகவுத்தியளவாகச்செய்து, சாற்றிடுவா யொருகுளிகை கொடுத்துபாரு சதுரத்தில்வசன முதற்பேதி நிற்க்கும், காத்துநல்ல மூலத்திற் கிருணிநல்ல கடிதான செறியாமை வாந்திநிற்கும், போற்றியே தேக்கத்தை பார்த்து தாக்கு புகலரிய போகரிஷி புகன்றிட்டாரே. 651

போகர் சீனபதியில் வெள்ளை மனுஷர் பிரதாபம்

புகன்றிட்டா ரின்னமொரு கருமானங்கேள் புகழான போகரிஷி கீர்த்திமார்க்கம், தகன்றிட்ட சீனபதிசென்று யானும் தாழ்வாக குளிகைகொண்டு பூமிதன்னில், மகின்றிட்டு யானுமங்கே யிரங்கிப் பார்த்தேன் மனிதருடநிறந்தானுமேக வெள்ளை, பகின்றிட்ட நிறமதுதான் வெள்ளையாகக் கண்டேனே பெண்களுட ரூபந்தானே. 652

தாஞன ரூபமது வெண்மை கண்டேன் தாக்கான தரணியெல்லாம் சுத்தி வந்தேன், கோஞன பெண்களெல் லாம் வானபேதம் குணக்குறிக ளனேகமதாய் தோற்றங் காணும், வேஞன சீனபதிப் பெண்களெல்லாம் மேன்மை யுடன் ருனிருக்கக் கண்டேயானும், பாஞன காரமது பூமிதன்னுல் பாங்கியர்களெல்லவரும் வெண்மைதானே.

வெண்மையாம் பெண்களுடன் போகஞ் செய்தேன் வேதாந்த தாயின துவருளினுலே, கண்மையாம் காலாங்கி தனைநினைத்து களிப்புடனே யிந்திரபோகஞ் செய்தேன் தண்மையாம் பதினெட்டுத் தொப்பிக்காரர் தாரணியிலவ தரித்தார் புகழ்ச்சிமெத்த, உண்மையா மானிடர்கள் பிறந் தாரப்பா வுற்பனமாம் கோடிவித்தை பெற்ருேர்தாமே. 654

தாமேதான் சவுக்காரவழலைசெய்வார் தகைமையுள்ள கண்ணுடி காய்ச்சுவார்பார், போமேதான் பூநீரை சுண் ணும்பாக்க புத்தியுள்ள மாந்தரப்பா சீனதேசம், காமே தான் மற்றதோர் தேசமெல்லாம் கருவனையல் பூநீரைக் காய்ச்சுவார்பார், நாமேதான் போகரிஷி கண்டமார்க்கம் நாதாக்கள் கைமறப்பும வெளியிட்டேனே. 655

வெளியிட்டேன் கோடியுகவித்தை யெல்லாம்வேண படியுபதேசஞ் செய்தேன்யானும், பளியிட்ட யெந்தனுக்கு சாபமில்லை பாருலகில் சித்தர்முனி கைமறப்பை, நெளி யிட்ட வெள்ளையென்ற மனிதருக்கு நேர்ப்புடனே காட்டி விட்டேன் காரணத்தை, துளியிட்ட தேசமெங்குஞ் சுற்றி வந்தேன் சூட்சாதி சூட்சமெல்லாந் திறந்திட்டேனே. 656

திறந்திட்டேன் வெள்ளையென்ற மனிதர்நீங்கி செப்ப லில்லை கருநீல மாந்தர்க்கு, குறைந்திட்ட வித்தையெல் லாம் கூறவில்லை கொட்டிஞல் மோசமது வாகும்பாரு, முறைந்திட்ட சாஸ்திரங்கள் சாபமெய்தும் மோட்ச மென்ற வீடில்லை நரசம்போவார், வரைந்திட்ட வாக்கி யங்கள் பிசகாய்ப் போகும் வாகுடனே போகரிஷி பாடினேனே. 657

காந்தச் செம்பு

பாடினே னின்னமொரு கருமானங்கேள் பாருலகில் சித்தர்முனி கூறுமார்க்கம், நீடியதோர் காந்தமது பலமோ வைந்து நேருன வெண்காரப் பலமோவைந்து, தேடிய தோர் பூநீறு பலமோவைந்து தெளிவான கெந்தியது பலமோகால்தான், கூடியதோர் சரக்கெல்லா மொன்ருய்ச் சேர்த்து குமுறவே குழிக்கல்லில் போட்டிடாயே. 658

போடவே தேனதுவும் விட்டுமைந்தா பொங்கமுடன் ருனரைப்பாய் சாமம்நாலு நீடவேச்சிரமாங் குகையில்

வைத்து நேர்புடனே சில்லிட்டுச் சீலைசெய்து, கூடவே ங்விதனிலே காயவைத்து குணமாகவுலையில்வைத்குவூதிப் பாரு, வாடவேகாந்தமது சத்தேயாகும் வளமாகச் சத் தெல்லா மெடுத்துக்கொள்ளே. 659

கொள்ளவே காந்தமென்ற சத்துதன்னைக் குமுறவே மறுபடியும் மூசைக்கேற்றி, விள்ளவே தானுருக்கியெடுத் துப்பாரு வீரான மணியது வாய்வுருகி நிற்கும், மெள் ளவே சத்தெடுத்து கல்வமிட்டு மேன்மை பெறவாறுவகை செயநீர் தன்ஞல், துள்ளவே தானரைபபாய் நாலுசாமம் துறையாகதானெடுத்து ரவியிற்பூசே. 660

பூசவே செம்பென்ற தகட்டில் மைந்த புகழாகப்பத் துக்குவெரன்றேயாகும், காசென்ற துட்டின் மேல்பூசிப் பூசிக் களமாக ரவியில் வைத்துப் புடத்தைப் போடு. மாசென்ற புடமதுவும் பத்தேயாகும் மகத்தான செம்பது வுமுறலேகும், பாசென்றகளிம்பதுவுமற்றுப் போய்பளிங் கான தம்பாக்கு நிறம்போலாமே. 661

நிறமான செம்பதுவுமொன்றேயாகும் நிறையான வெள்ளியது வொன்றேயாகும், திறமானதங்கமதுவொன் றேயாகும் திடமுடனே மூசையிட்டுவுருக்கித்தீரு, பர மான சரக்கதுவு மொன்ருய்ச் சேர்த்து பளபளத்த வர்ன மது காந்தி மெத்த, உறமானமாற்றதுவு மெட்டதாகு முத்தமனே போகரிஷி யுரைத்தவாரே. 662

வாருன பொன்னதுவும் வாரடித் வளமுடனே பூங்கா விதன்திற்போட, மாருனமாசியது நீங்கிதான் மகத்தான பசுமை நிறத்தங்கமாகும், காருன கடைத்தங்கமிதுக் கொப்பாமோ கடந்தமுனி சித்தரிஷி செய்யுமாற்கம், பேருன காலாங்கியடிவணங்கி பேருலகில் மாந்தர் கட் காய் செப்புவேனே. 663

செப்பினேன் நாதக்களருமைவித்தை செகத்திலே யாராலுங் கூறப்போமோ, ஒப்பவே மனேன்மணியாள் பாதம் போற்றி ஒழுங்குடனே சிதாபாசந்தன்னை நீக்கி, தப்பவே பூரணத்தை மனதிலுன்னி சதாகாலம் நிருவானி முன்னதாக, மெப்புடனே பராபரியை மன்னிப்பாக மேதி னில் தவசிருந்து நாளைப்போக்கே. 664

போக்கவே துஷ்டருடன் கூடவேண்டாம் பொலி வானவுளவை யெல்லாங் காட்டவேண்டாம், தூக்கமுடன் சோம்பருடன் கூடிவார்த்தை துறைமுகங்கள்யா தொன் றுங் காட்டவேண்டாம், வாக்கிலுள்ள சித்தர்முனி ரகசியத்தை வளப்பமுடன் விருதாவில் கொட்ட வேண் டாம் நோக்கமுடன் ருனிருந்து பொருளாராய்ந்து நொடிக் குள்ளே காயசித்திக்கிடமுந்தேடே. 665

வசியமை

தேடயிலேயின்னமொரு மாற்கம்பாரு தெளிவான மையென்று செப்பக்கேளு, நீடயிலே வழுகண்ணி தொழுகண்ணியாகும் நீடான நீர்மேல்னெருப்புமாகும், கூடயிலேபசளையாங் கரும்பசளை யாகும் குறிப்பானவாள் காட்டினிலையுமாகும், வாடையிலே அழுஞ்சியென்ற மூலியாகும் வகுப்பான கருமூலி இருள் மூலியாமே. 666

மூலியாம் பேய்மிரட்டி முசுகட்டையாகு முகிழான கருந்தும்பை விளாத்தியாகும், வாலிவாம் கருடனிட மூலியாகும் பாங்கான கருங்குவளை பொன்முசுட்டை வேலியாங் கருமூலிச்சாற்றுக்கூட்டு வெடிப்பானவாதளையின் பாலுங்கூட்டி, கோலியாம் கழற்சியிட பூலிதானும் குணமான பசிமூலிபுன்னையாமே. 667

புன்னையாமே ரண்டமிரண்ட தாகும் புகழான நரிமிரட்டி மூலிதானும், மன்னையாம் பேய் மூலிதிகைப்பூண்டாகு மயமான வாளையுடநூமத்தை யாகும், தொன்னையாங்கடம் பையுடன் முதியார்கூந்தல் தோரான வாள்மிரட்டி மூலிதானும், பன்னையாம் கருங்காலி சாறையாகும் பாங்கான திமிர்க்கேட்டான் மதிப்பூண்டாமே. 668

பூண்டான கூத்தனிடகு தம்பையாகும் புகழான நன்னுரி மூலிதானும், தீண்டாதவாடு தின்னுப் பாளைதானும் திறமான கருங்கோவை சிவனுர் வேம்பு, கூண்டான மரமல்லி செவ்வல்லி தானும் கொடிதான மையூரின் சிகைதானுகும், தூண்டான மூலியிடச் சாறுவாங்கி துறைபோலமையெடுக்கும் வகையைக் கேளே. 669

கேளே நீசாறெல்லா மொன்ருக் கூட்டி கீர்த்திபெற சீலைதனிலூட்டிமைந்தா, பாளேதான் போகாமல் காயவைத்துப் பாங்கு பெறசீலை தனையுருட்டியேதான், மீளேதான் அழுஞ்சியிட தயிலத்தாலே மிகமை பெறதானனைத்துக் கொளுத்திப்போடு, கீளேதான் பீங்கான் வைதயிலம் வீழும் கிருபையுடன்ருனெடுத்து வகையைக்கேளே. 670

வகையான வாந்தையுட பிச்சிதானும் வாலுவான செம்போத்துப் பிச்சுதானும், பகையானவல்லூறுப்பிச்சுதானும் பாங்கான காட்டோணன் பிச்சுதானும், தகையானவாயசத்தின் பிச்சுதானும் தடிப்பான சாரையுட பிச்சுதானும் முகையான காடையுட பிச்சுதானும் மூர்க்கமாம் கருங்குருவி பிச்சுதானே. 671

பிச்சானமீன்குத்தி பிச்சுதானும் பேராளதேவாங்கு பிச்சிதானும், முச்சான கருங்குரங்கு பிச்சுதானும் முயலான நாரையுட பிச்சுதானும், வச்சான மாடப்புரா பிச்சுதானும் கொடியான பூனையுடபிச்சுதானும், நச்சான பாம்பரணி பிச்சுதானும் நலமான கருஞ்சாரை பிச்சுமாமே. 672

ஆமேதானித்தனையு மொன்ருய்க்கூட்டி அப்பனே புனுகுடனே பச்சைப்பூரம், போமேதான் கோரோசனை குங்குமப்பூ பொலிவான சவ்வாது தானுங்கூட்டி, காமேதான் கஸ்தூரி வாடைதானும் கருவான முதற்ழிட்டு சீலையோடு, காமேதான் வழிஞ்சியிட தயிலத்தாட்டி விருப்பமுடன் பரணிதனில் யதனம்பண்ணே. 673

பண்ணவே மையதனை எடுத்துக்கொண்டு பதிவான வுருவுதனை யேற்றியேதான், திண்ணமுட ஞஞ்சனேயர் வுருவைமாட்டி தீரமுடனே லட்சமுரு போட்டுக்கொண்டு, வண்ணமுடன் இலாடமதில் மையைத்தீட்டி மயங்கிடவே லோகமெல்லாம் வசியமாவார், நண்ணமுடன் ராஜாதிராஜர்தாமும் நாட்டிலே சித்தர்களும் வசியமாமே. 674

வசியமாமஷ்டசித்து யிதனுலாகும் வனமான மோகனமுமிதனுலாகும், வசியமாம் ஸ்தம்பனமு மிதனுலாகும் வாகான கருவுகளு மிதனுலாகும், வசியமாம் பேதனமு மிகனுலாகும் மகத்தான கிரியை முதலிதனுலாகும் வசியமாமுச்சாடன மிதனுலாகும் மார்க்கமுடனுரு மாற்றமிதனுலாமே. 675

ஆமேதான் சித்தர்முனி செய்யும்பாகம் அடவாகப் பலநூலு மாராய்ந்தேதான், நாமேதான் காலாங்கிநாதர் பாதம் நாட்டமுடன்ருள் பணிந்து நவிலலுற்றேன், வேலேதானிக் கருவைவெளிவிடாதே விட்டாலே வெகு மோசமாகும்பாரு, நாமேதான் சொல்லுகிருேம் யானை மாற்கம் நாதாக்கள் பிடிவாதம் நவில்வோம் பாரே. 676

பாரேதான் குருவாணை சுவாமியாணை பராபரியாய் தன்னுணை சிவனுராணை, சீரேதா னுமையாணைவும் பராணை சிவாலயங்கள் கன்னுணை தேவியாணை, கூரேதான் குருவாணை கணேசனுணை குறிப்பான கண்ணனிடவாணைகண்டீர், நேரேதான் சித்தரிட யாணைகண்டீர் நெரியான முனிவரிஷிகளாணையாமே. 677

ஆமேதானுணையது கடக்கவேண்டா மப்பனே சாமமதுசெய்தும்பாரு, நாமேதான் சொல்லுகிருேம் ரிஷிகள் போக்கு நன்மையுட னுபசாரஞ் செய்யவேண்டும், வேமேதான் மனதுவர நடக்கவேண்டும் வேதந்தாயினது வருளேவேண்டும் போமேதான் கற்பமது கொள்ள வேண்டும் பொலிவான நன்னடக்கை வேண்டுந்தானே.

தானுன ரிஷிகளிட பதாம்புயத்தை சதாகாலம் சிரசின்மேற்ருக்க வேண்டும், கோனுன சாபத்திற்கிடங் கொடாமல் குருநிந்தை யணுகாமலிருக்க வேண்டும், மானுன சித்தர்முனி தங்களுக்குடி பட்சமுடன் மனதுவர நடக்கவேண்டும், மானுன சாத்திரத்தை யாருக்குந்தான் மானிடரே கொடுத்தாக்கால் தீமையாமே. 679

தீமையாங் தலையதுதான் வெடித்துப் போகும் திகழான சாபமது மேவும்பாரு, சாமையாங் கோபமது வதிகமாகி சண்டாள துரோகியென்று சபிப்பார் சித்தர், ஆமையா மூடனென்ற பெயர்தானாகு மூர்க்கமுடன் தானுரைப்பார் வதீதமெத்த, ஆமைபோலுறுப்பெல்லாந் தானடக்கி அவனியிலே வாழுவது மதீதங்காணே. 680

காணவே நல்வழி போகாவிட்டால் கடிந்துரைப்பார் சித்தரெல்லாம் நாள்கடோறும், மாணவே சாபத்துக்கிட முண்டாகு மாற்கமுடன் யாதொன்றுங் காட்டவேண்டாம், வேணவே சூத்திர சாத்திரங்களெல்லாம் விள்ளாத கைமறப்புவுளவு சொல்லி, நாணவே முப்பூவுக்குறவுஞ் சொல்லி நாதாக்கள் தானெடுக்கும் வகையைத்தேடே.

பூநீறுக்கு பூமிவளம்

தேடையிலே பூம்பாறை யானைக்கல்லாம் தேசத்தில் சோழனிட நாடேயாகும், ஓடையிலே விராலியிட மலைதானாகும் வுத்தமனே திருப்பாண்டி நாடேயாகும், மேடையிலே நாகார்ச்சன மலையுமாகும் மேலான நாமக்கல் பாறையாகும், வாடையிலே சுவாமியிட மலைதானாகும் வளமான சுரசிந்து யோரமாமே. 682

ஓரமாம் நர்மதா பூமியாகு முத்தமான திருமாளி நகரமாகும், காரமா முகவைபதி கடலோரந்தான் கரியான பூமியிடம் படிகக்கல்லாம் தூரமாம் தாம்பரபரணி ஸ்தலமுமாகும் தூக்கான வேகவதி தீர்த்தமாகும் பாரமாம் சித்தூராமாக் காடாகும் பசுமலையும் நீரெடுக்கப் பதியுமாமே. 683

பதியான கங்கைநதிக் கடலோரந்தான் பாங்கான வளர்பூமி தேசம்யாவும், நதியான வால்மீகர் பாளந்தன்னில் நயமான யிடப்பாகம் புத்தாருண்டு, விதியான சித்தர்முனி யிருக்குந்தானம் விநோதவதியா ரொன்று கம்பவொன்று, சதியான மிருகங்களிருக்குந்தானம் சதகோடிசூரியர்போல் ரிஷிகள்பாரே. 684

பாரேதான் கல்லானை வாசஞ்செய்யும் பனிமூடும் தேசமது பகரப்போமோ நேரேதான் கணையொன்று மலையுண்டுண்டு நெடிதான பூமியெல்லா மளறேயாகும், சீரேதான் பாலைநிலமென்பார் சித்தர் சீர்பாதம் பட்டாலே வெந்துபோகும், ஊரேதான்பூண்டு முதலில்லையப்பா வுத்தமனே காரமென்ற பூமியாச்சே. 685

சுண்ணமென்ற பூமிதனில் பூநீரப்பா சுருதியுடன் றானெடுத்து மாண்டார்கோடி, அண்ணலென்ற வாவடையார் கோயிலுண்டு அதன்பக்க மெண்ணாயிரங் காதமப்பா, கண்ணபிரான்றானிருக்க கோயிலுண்டு

கருந்தூர மானிடர்கள் செல்லமாட்டார், தண்ணமுடன் மகாகோடி முனிவர்சித்தர் சதாகால வாசமது செய்வார் தானே. 686

தானான கோயில்குள மதிகங்காணும் தாக்கான மானிடர்கள் காணாதேசம், பானாவூர்வனமு மில்லாச் தேசம் பாழான மலைகுகைகள் கண்டோரில்லை, தேனான தேன்விளையுங் கத[illegible]டுக்காடு தெற்கான தேசமது கள்ளர் நாடு, மானாவைழகர் மலைபுத்தூராகு மகத்தான வைகை நதிபூமியாதே. 687

ஆமேதா னத்திநக ராசிர்மந்தான் அயோத்தி நகராற் ரோரங்கரை தானாகும், வேமேதான் விலாடபுரி குகையோரந்தான் வெளிக்காடு பூமியெல்லா மளறேயாகும், நாமேதான் கண்டபடி யின்னஞ்சொய் வோம் நாதாக்கள் தானெடுக்கும் வளமுஞ் சொல்வோம், போமேதான் பொன்னகர மேருபக்கம் பொலிவான ஸ்தலமுண்டு புகலக்கேளே.

கேளேதான் ஸ்தலமதுவும் தேவ தாஸ்தானம் கெடியான கோபுரமும் தங்கமாகும், காளேதான் விக்கினங்கள் தங்கமாகும் கடலான மதிலெல்லாம் தங்கமாகும், ஆளேதான் கண்டறியாதேவதானம் ஆத்தான மண்டபமுந் தங்கமாகும், மீளேதான் வாகனங்களெல்லாம் தங்கம் மெழிலான பூமியெல்லாந் தங்கமாமே. 689

தங்கமாம் தேரதம்தங்கவர்னம் தனியான பிரதமைகள் தங்கமாகும், அங்கமாலட்சுமியுய் வாசஞ்செய்வாள் அங்நகரம் கண்டவர் களாருமில்லை, புங்கமாஞ்சித்தர் முனிரிஷிகள் தாமும் பொலிவான கூட்டமெத்த கோயிலுள்ளே, சிங்கமுடன் கோபுரமாம் வாசல்தன்னில் சிறப்புடனே காவலது கண்டேன்பாரே. 690

கண்டேனே வன்னகரஞ்சிறிதுகாலம் கவனமுடன் குளிகையது பூண்டுகொண்டு, அண்டரண்ட முடையதொரு கோபுரத்தில் அப்பனே யான்சென்று பார்த்தபோது, திண்டமுடனவ்விடத்தில் ரிஷிகளப்பா தேவாதி கோஷ்டமுடன் தியானஞ்செய்வார், தெண்டமுடனான வரைக்கண்டபோது திடுக்கிட்டு மனங்கலங்கி தியங்கிட்டேனே. 691

தியங்கிட்டுவடியேனும் காலாங்கிதன்னைத் தியக்கமுடன் தானினைத்து விழித்துப்பார்த்தேன், மயங்கிட்டயெந்தனையும் ரிஷிகள் பார்த்து மனமிறங்கி தீரமுடன் வதீதஞ் சொன்னார், தயங்கிட்டயெந்தனையும் யாரென்று கேட்கத் தாழ்மையுடன் சிரங்கு வித்து வணக்கஞ்சொன்னேன், நயங்கிட்டு வடியேனும் குளிகை பூண்டு நாட்டமுடன் பூவிளையும் தேசம்வந்தேன். 692

வந்தேனே பூமி வளங்காண வந்தேன் வளமையுடன் நாதாக்களெடுக்கும் ஸ்தானம், சந்தேகமில்லாத வனந் தானாடு சார்புடனே மலைகுகைகள் யாவுங்கண்டேன், தொந்தமுடன் நதிகரைகள் யமுனையாவும் தோறாமல் குளிகைகொண்டு சுத்திப்பார்த்தேன், எந்தனிடதைரியங் கள் மிகவுமாகி யோகினேன் பொன்னகரங்காணத்தானே.

காணயிலே தேவஸ்தான பெருமை கண்டேன் கைலங் கிரிவாசங்களிதற்கீடல்ல, வேணவே வதிசயங்களெல் லாம் பார்த்தேன் விளைகின்றபூநீரும் காரமெத்த, தோண வே மானிடர்களெடுக்க மாட்டார் தொலைதூர தேசமுந் தொடரமாட்டார், மாணவே வந்தாலு மாண்டுபோவார் மகிதலத்தில் சித்தருடதேசந்தானே 694

தேசத்தைக்கண்டாலு மாண்டுபோவார் தெரிசித்தால் சித்தர்களுஞ் சாபஞ்சொல்வார், பாசத்தை விட்டொழித்து வந்திட்டாலும் பதையாமற் காரத்தால் சாவார்தாமும், வேஷத்தை போட்டுமல்லோவீணர்கூடி, வெகுவெகுவாய் வளம் பார்ப்பார் கோடிகோடி, நேசத்தை விட்டொழியார் மாய்கையாலே நெடுந்தூரஞ் செல்லார்கள் சண்டிமாடே.

மாடானசண்டிகளை விட்டுநீங்கி மார்க்கமுடன்குளிகை கொண்டு பார்க்கவந்தேன், காடானவனாந்திரங்கள் குகை கள் கண்டேன் கனமான சித்தரிட மார்க்கம்பார்த்தேன், கோடானகோடி முறையாவும் பார்த்தேன் குறிப்புடனே பொன்னகரம் கண்டுவந்தேன், :சேடான பகவானால் சொல்லலாகா சிறப்பான பொன்கரங் கண்டேன்தானே.

கண்டேன் சதாசிவத்தின் கோயில் கண்டேன் கைலங்கிரிவாசரை யான்கண்டதில்லை, தொண்டுசெய்யும் ரிஷிமுனிவர் பாதங்கண்டேன் தோராதவர்ச்சனைகள் யாவும் பார்த்தேன், அண்டரண்ட சராசரங்களிதற்கீடல்ல ஆதிசேடன் தன்னாலுங்காணலாகா, தண்டமுடன்மேற்புர வாசல்வந்தேன் தேவரிஷி என்றொருவர் முனிகண்டேனே.

முனியான ரிஷிசித்தர்யானுங் கண்டேன் மூலஸ்தா னப்பெருமை கோயில் கண்டேன், கனியான வடவாசல் சேர்வைகண்டேன் தாக்கான பொன் கோபுரவாசல் கண் டேன், தொளியான வாத்தியங்கள் வழங்கக் கண்டேன் தோராத கண்ணபிரானுஞ்சல கண்டேன், இனியானதடா கங்கள் படிகளெலா மியலானதங்கமது வர்னமாமே. 698

ஆமேதான் வண்ணங்களெல்லாம் பார்த்தேன் அதற் கப்பால் பூமியிட நாதங்கேட்டேன், தாமேதானின்னகரம் பூநீரப்தா தாக்கான சித்தர்களுங்கண்ட மார்க்கம், போமே தான் முந்நூறு காதந்தானும் பொலிவான பூநீறுவிளையும் பூமி, நாமேதான் கண்டுவந்தேன் பூநீர் தன்னை நாட்டிலே கண்டவர்களில்லைதானே. 699

தானே தாண்கண்ட மட்டுங்குளிகை கொண்டேன் தயவுடனே மாணாக்கள் பிழைக்கவென்று, நானேதான் சித்தர்முனி சொன்னநூலை நலமுடனே யாராய்ந்து வள முங்கண்டு, மானேதான் தேர்ந்தெடுத்தே னிந்தநேசம் மகத்தான தேசங்களிதற்கீடல்ல, பானேதான் முன் சொன்ன தேசமெல்லாம் பாங்கான பூநீறுக்காதியாச்சே.

பூநீரெடுக்க விதி

ஆச்சப்பா பூநீறுயெடுக்கு மார்க்கம் அப்பனே விதி சொல்வேன் மதியாய்க்கேளும், பேச்சப்பாசித்தருட சாத் திரத்தில் பிரட்டானகை மறப்புவதீதமெத்த, காச்சவே பூநீரையெடுக்குஞ்சைகை கருவாகச் சொல்லவில்லை சாத திரத்தில், பாச்சலுடன் காலாங்கி வையர்பாதம் கருணை யுடன்றான் பணிந்து உறுவேனே. 701

கூறுவேன் பங்குனியாம் பருவந்தன்னில் குறிப் புடனே நாதாக்கள் சொன்னமார்க்கம், மாறுபடுபே தனங் கள் கண்டாராய்ந்து மதிதலத்தில் நீறுகாய்க்குங் காலம், வேறுடனே ராக்காலஞ் சாமம்மத்தி விருப்ப முடன் காட்டகத்தே சென்றுமேதான், சாறுடனே காட் டெல்லாம் திரிந்துபாரித்தால் சதிரான பூநீறுபூர்க்குந் தானே. 702

பூர்க்குமே பூநீறுகதிர் போலாகும் பொங்கமுடன் றானெழும்பி மலர் போல்விழும், தீர்க்கமுடன் காரமது யில்லாவிட்டாலும் தெளிவான பூநீரைவாரிவந்து, மார்க்க முடன் றான்கரைத்து தெளிவிறுத்து மயங்காமல் தீட்சை யதுபத்து செப்பே. 703

செய்யவே யின்னமொருகேளு செழிப்பான திரை யாம் பருவகாலம், பையவே பூரணையாம் பட்சந்தன்னில் பாங்கான நடுச்சாமவேளை பார்த்து, மெய்யவே பூநீறு விளையுமாற்கம் மேன்மையுடன் கண்டறிந்து யெடுக்கும் போது, தொய்யவே தேவதையின் பூசைவேண்டுந் தோரா மல் வட்சரத்தை மாறிக்கொள்ளே, 704

கொள்ளவே தீட்சைவிதி மார்க்கந்தன்னை குறிப் பாகத்தான் செய்துமுடிப்பாயானால், எவ்வளவுங் கோளாறு நேராதப்பா என்மகனே குருமுடிக்கும் வகை யைத்தேடு, விள்ளவே பூமியுடவளமுஞ் சொன்னேன் விருப்பமுடன் நாதாக்கள் துறையுஞ் சொன்னேன், மெள்ளவே யன்னூலேழா யிரந்தான் மேன்மையுடன் கண்டறிந்து யோகந்தேடே. 705

தேடையிலே போகரிஷி சொன்னமார்க்கம் தெளி வாக யாருந்தான் சொல்லாரப்பா, நீடையிலே வாசனத் துக் குறுதி சொல்வேன் நெடிதான மான்தோலா சனந்

தானுகும், ஆடையிலே காவிஷாயமாகுமப்ப னேயடி
வேட்டி முழந்தானுலு, முடையிலேமேலங்கி முழங்காமல்
மட்டும் முக்கியமாய்த் தானணிதல் முறைமையாமே 706

முறைமையாய்த் தானிருந்து யோகவெட்டி முடிமீது
தானணிந்து யோகஞ்செய்வாய், நிறைமையாய் கைகாலே
முடக்கவேண்டும் நித்தியமும் வாசிதனை நடத்தவேண
டும், திறைமையாய் வட்சரத்தை மாறவேண்டும் தீர்க்க
முடன் சின்மயத்தி லேறவேண்டும், வறைமையாய் சூட்
சாதி வாராதாம் வகுப்புடனே யறிந்தவனே யோகியாமே.

பூநீரெடுக்கமறுபாகம்

யோகியா மின்னமொரு மாற்கங்கேளு நொடிதான
சித்தரப்பர் வமுன்னே, ஆகியேபூகிவயந்தன்னைப் பார்த்து
அப்பனே யளர்பூமியாராய்ங்தேதான்,பாகியேயோரளிஞழ
மட்டும் பாங்குடனே யளர்களத்தையா ராய்ங்தேதான.
மாகியேகிட்டணைகள் மிகவுஞ்செய்து மார்க்கமுடன்
பன்ணுடை மேலேசாத்தே. 708

சாத்தவே மூன்றுநாள் சென்றபின்பு சாங்கமுடன்
சென்று பார்க்கும்போது, ஏத்தமுளவளர் போலே யிருக்
கும்பாரு என்மகனே வாரியதை பீங்கானிட்டு, தூத்த
முடன் பனிநீரால் கரைத்துமேதான் தேராமல் சத்து
முறை தெளிவிறுத்து, மாத்தமேமறு சட்டிக்குள்ளே
வார்த்து மயங்காமல் பத்துமுறை காய்ச்சுகாச்சே. 709

காய்ச்சவே வுப்பதுவு மிகவேபூர்க்கும் கருவான வுப்
பதுவுங் காரமெத்த, மாய்ச்சலுடன் சரக்குக் கடுங்கால
ஞகு மகத்தான வேதையிது கோடிக்கொவ்வும், தீய்ச்ச
லுடன் வுப்புக்கு தீட்சைசெய்து திறமுடனே காய்த்துக்
குறுதிபண்ணு, பாய்ச்சலுடன் முப்பூவுங் தின்றுயானல்
பாங்குடனே தேசமதுயிறுகுந்தானே. 710

தானுனகாயத்தை நிறுத்தவேண்டும் சதாகாலம்
சுக்கிலத்தைக் கட்டவேண்டும், வேனுனமும் மலத்தை
யறுக்கவேண்டும் வெளியான சிதாபாசம் நீக்கவேண்டும்
பாழான நூலமதை வெறுக்கவேண்டும், மானுன பரா
பரியை நிர்த்தஞ்செய்து மானிலத்தில் வாழ்பவனே
சித்தனுமே. 711

மேருவுக்கு இடபாகத்தில் கண்ணபிரான் ஸ்திரீகள் விலேமண்டபத்தை போகர்கண்டது

சித்தனுங் காலாங்கி நாதர்பாதம் சிறப்புடனே
போகரிஷி யடிபணிந்து, சுத்தமுடன் மேருவுக்கு யிட
பாகத்தில் சிடரொளிபோலிபோல் மடுவொன்று
நதியோன் றுண்டு, முத்தமுடன் மண்டபமுஞ் சுனை
யுங்கண்டேன் முயலான மண்டபத்தினருகே சென்றேன்

கர்த்தனெனுங்கண்ணபிரான் மாளிகண்டேன் கதிரொளி
போநவரத்தினகசிதந்தானே. 712

கசிதமாமண்டபத்தினடியோரந்தான் கதிரோனைக்
கண்மறைக்கும்சித்தரப்பா, நிசிதமுடன் தவநிலையில்
வணங்கிநிற்பார் நீடூழிகாலவரைக்கண்டதில்லை, உசித
முடன் கண்ணபிரானுனவற்குவுற்பனமாங்குளிகையது
மிக[illegible]வார், றுசிதமுடன் குளிகையதுபூண்டுகொண்டு
துரைராஜர்சதாநித்தம் கலவி செய்வார். 713

செய்வாரே பன்னிரண்டாயிரந்தான் சிறப்பான
தேவதாபெண்கள் தானும், உய்குவாரெட்டெட்டுகலவி
யோடு வுற்பனமாம்நிசிதகளேயார் செய்வார் பார், மொய்க்
குமல்மார் தானிருக்குப் பளிங்குமாடம் மும்மணியாம்
தேவரிடவாசீர்மந்தான், நெய்தலுடன் கொட்டியவர்
தாமரைப்போல் நேரான தடாகமது கண்டேன் பாரே. 714

போகர் ஸ்ரீகிருஷ்ண மண்டலத்தில் சித்தர்களைக் கண்டது

பாரேதான் தடாகத்தில்கோடிசித்தர் பாங்கானயாதவத்
தின் சித்தராகும், நேரேதான் தடாகத்தில் கீழ்பாகத்தில்
நெடிதானசித்தர்களோகுறும்பராகும், சேரேதான் தடாகத்
தின் மேற்பாகத்தில் சிறப்பானசித்தர்களோமூலவர்க்கம்,
ஊரேதான் தடாகத்தின் குணபாகத்தில் வுத்தமனே கன்
னடியர் சித்தராமே. 715

ஆமேதான் சித்தருடவளமுங் கண்டேன் அதற்கப்
பாலவருடையவுளவுங்கண்டேன், தாமேதான் தவநிலே
யினுறிதிகண்டேன் சாங்கமுடன் வயதில்தோலக் கோயி
லில்லே, போமேதான் குளிகையதுபூண்டு கொண்டு பெங்க
முடன் தவநிலேயிலெதிரில் நின்றேன் வேமேதான் சித்தர்
களுமென்னை கண்டு வெகுவெகுவாய் மாருட்டஞ் செய்
தார்பாரே. 716

செய்யவேயடியேனுங்குலே நடுங்கித் திடுக்கிட்டு
மெய்மறந்து யேங்கிநின்றேன், பையவேயெந்தனை யா
ரென்றுகேட்கபட்சமுடன் காலங்கிதனை நினைந்து, மெய்
யுடனே யென்பேருபோக ரென்றேன் மெச்சியே யெனக்கு
யுபதேசஞ்சொன்னுர், வலமையுடனே லலாடமதில் பூண்டு
கொண்டு மகத்தான கண்ணபிரான் தனைக் கண்டேனே.

கண்டேனே கண்ணபிரானருகில் வந்தேன் கன
முடனே யவர்பாதம் போற்றி செய்தேன், தொண்ட
னெனுமடியேனுந் தாள்பணிந்து துரைராஜர் முன்பாக
நிற்கும்போது, தெண்டமுடன் மண்டபத்தினருகே
நீதான் தீவிரமாய் போய்வரலா மோர்த்தாவென்றூர்,
பெண்டுகள் தாமிருக்கு மிடந்தெரியாதோ பேரான
போகரிஷி சாபந்தானே. 718

சாபமது சொன்னவுடனடி யேன்தானும் சாங்க
முடன் கண்ணபிரான் தன்னைநோக்கி, வேகமுடன்
காலாங்கிதனை நினைந்து விகற்பமது யெந்தனுக்கு
நேர்ந்ததென்று, சாகமுடனடி யேனுஞ்சாபம் நீக்கித்தா
ரணியில் பிழைப்பதற்கு கெதிதானென்ன கண்ணபிரான்
மனமும்வந்து யட்சம்வைத்து மயந்தனுக்கு மொழி
சொன்னாரே. 719
கொன்னாரே கண்ணபிரன் மனமுவந்து சுட்டெரிக்க
போகரையு மனதிலெண்ணி, நன்னயமாய் குளிகை
கொண்ட போகர்தன்னை நயமுடனே தாமுரைப்பார் தீத
மெத்த, பன்னகசாலையிலிருக்கும் பாங்கி மாரைப்பார்த்
ததினாலுந் தனுக்கு கெடுதியாச்சு, வன்னயமாயெந்தனையு
மெடுத்துக்கூற வாகுடனே மறுபடியும் வணங்கிட்
டேனே. 720
வணங்கிட்டே போதையிலே சித்தரெல்லாம் வாகாக
வோடிவந்து யென்னைச்சூழ்ந்தார், பிணங்கிட்ட யெந்
தனையும் ரிஷிகள் பார்த்து புரியமுடனோடி வந்து பின்
னுஞ் சொல்வார் தணங்கிட்ட யெந்தனுக்கு சொன்ன
தென்றால் தயவுடனே போகரிஷி சொல்லக்கேளும்,
சுணங்கிட்டு கண்ணபிரான் மண்டபத்தில் துறைகோடி
ரிஷிமுனிவர் போனார்காணே. 721
காணேமேயிது நெடுநாள் சித்தர் தம்மைக் காத்
திருந்தோம் நெடுநாளாய் நதியோரத்தில், நாணவே
தேவாதிரிஷிகளெல்லாம் நலமுடனே யன்றாடம் வருவார்
போவார், வேணவே வுபசாரம் நடக்குமிங்கே விசை
யுடனே மண்டபத்தில் போனாரில்லை, ஆனவேயும் முடை
யவிறு மரப்பாலே ஆக்கினையைதான் கடந்து வந்
திட்டீரே. 722

போகருக்குச் சாபங்கொடுத்தது.

வந்ததினாலுந் தனக்குச்சாபமப்பாவரை கோடியுகவரு
ஷம் தந்தோம் காணும் தொந்தமுடனான் கொடுத்தார்
சித்தரெல்லாம் தொல்லுலகில் போவதற்குயிடமுமில்லை,சந்
தமுடன் கிருஷ்ண மண்டபத்தினேரம் சாங்கமுடனானி
ருந்தேன் சில காலந்தான் கந்தமுடன் பெண்களெல்லாம்
திநயோரத்தில் கலந்துமே சலக்ரீடை செய்யவந்ததாமே
தாமேதானெந்தனையுங் கண்டாரப்பா சதகோடி சூரியர்
போல் கண்டேன்யானும், காமேதான் பெண்களெல்லாம்,
வேமேதான்யெந்தனையுயாரென்றார்கள் மிக்கவுமே தாள்
பணிந்துயடி வணங்கி, நாமேதானிவ்வூறுதேசமல்ல நல 724
முடனே சீனபதியென்றிட்டேனே.
என்றவுடன் பெண்களெல்லாம் மதிசயித்து ஏற்ற
முள்ள சிறுபாலராயன் தான்வந்தீர், என்றுடனே பசுநீங்

கும் கதையைப்போல பாங்கியற்குப் பரிதாபமெடுத்துச்
சொன்னேன், நன்றுடனே காலாங்கி சீஷனம்மா நாட்டி
லுள்ள வளமெல்லாங் காணவந்தேன், தென்றிசையில்
நானிருந்து குளிகைபூண்டு சிறப்பான சீனபதிபோனேன்
தானே. 725
பானதினால் வதிசயங்கள் மெத்தவுண்டு பூதலத்
தாருருந்தாள் கண்டதில்லை, நானதினால் சிலகாலமங்கி
ருந்தே நயமுடனே பெண்களெல்லாம் வெண்மை கண்
டேன், தானவனும் கமலமுனி யங்கிருந்தார் சாஷ்டாங்க
தெண்டனிட்டுத் தாள்பணிந்தேன், ஆனதினா லெந்த
னுக்கு வுபதேசங்க ளனேகமதாய் தானுரைத்தார் வதிச
யந்தானே. 726
தானான வதிசயங்க ளனேகஞ் சொன்னேன் தகமை
யான சீனபதி சிறப்புஞ் சொன்னேன், வேனான மேருகிரி
போனேனம்மா வெழிலான விருவத்தோர்வரை தானுண்டு
கோனான யேழுவரை சொன்னேனம்மா சோடிமுனி சித்தர்
களைக் கண்டேனென்றேன், பானான வடிவேலர் ஸ்தல
மொன்றுண்டு பாங்கான பொன்மானுங் கண்டிட்டேனே.
கண்டேனே சித்தர்வர்க்கங் கோடாகோடி காணாத
வரை தேசமனந்தமுண்டு, அண்டான முனியறியாக்
காடுங் கண்டேன், அங்குள்ள வதிசயங்க ளெல்லாஞ்
சொன்னேன், பண்டமுடன் கிடாரங்கள் வைப்பு சொன்
னேன் பாங்கியர்க ளெல்லோரு மதிசயித்தார் தெண்ட
முடனெந்தனுக்குச் சாபந் தீர்த்து திகழுடனே யனுப்ப
வென்று விடைகேட்டேனே. 728
கேட்டவுடன் பெண்களெல்லாம் கிருபைவைத்துக்
கிருபையுடன் கண்ணபிரான் பக்கல்வந்து, நோட்டமுடன்
பன்னீராயிரங்கள் பேரும் நுணுக்கமுடனாமுறைத்தா
ரென்னைத்தானும், தேட்டமுடன் சீனபதி யிருந்தசித்தன்
திறமுடனே லோகமெல்லாங் காணவென்று வாட்ட
முடன் குளிகையது பூண்டுகொண்டு வந்திட்டானும்பர்
பதியென்றிட்டாரே. 729
என்னவே பெண்களெல்லா மொன்றாய்க்கூடி யெழி
லாகவெந்தனுக்குச் சாபம்நீக்க, நன்னயமாய்க் கண்ண
பிரான் தன்றமக்கு நலமுடனே தாமுரைத்தா ரதீதமெத்த
சொன்னவுடன் கண்ணபிரான் கடாட்சம்வைத்து சுகமுட
னேசித்தர்தம்மை தாமழைத்து, பன்னயமாய் சாபமதை
நீக்கவென்று பட்சமுட னெந்தனுக்கு விடை தந்தாரே.
விடைதந்தார் சித்தர்களுந் தானுங்கேட்டு விரைவு
டனே யோடிவந்து வுண்மைகூறி, படையுடனே கூட்ட
மதா யொன்றாய்க்கூடிப் பரிவாக வுபதேசம் பாலித்தே
தான், சடையுடனே ரிஷிமுனிவர் சித்தர்தாமும் சமைத்

திட்டார்சாபமதை எந்தனுக்கு, தடைநீங்கி கண்ணபிருன்
விடைகள்பெற்றுச் சாங்கமுடன் சீனபதி வந்திட்டேனே.

கமலமுனியைக் கண்டது

வந்தவுடன் கமலமுனி தன்னைக் கண்டேன் வாகு
டனே கண்ணபிருன் வளமை சொன்னேன், நொந்துமன
முருகியல்லோ சித்தரெல்லாம் நொடிக்குள்ளே யெந்த
னுக்குச் சாபம் சொன்னார், வந்த பெண்களெல்லாரு
மென்னைக் கண்டு கருணைபெற சாபமதை தீர்க்கவென்று
அந்தமுடன் கண்ணபிருன் பக்கல்சென்று அடிவணங்கி
சாபமதை தீரென்றாரே. 732
என்றயிலே கண்ணபிருன் முனிவர்தம்மை யெழிலா
கத் தாமழைத்து வறுதிசொன்னார், அன்றையிலே ரிஷி
முனிவர் சித்தர்கூடி அகமுடனே முகமலர்ந்து சாபந்
தீர்ந்து, இன்றையிலே சாபமது தீர்ந்ததென்று எழிலுடன்
சீனபதி போகவென்று, சென்றுடன்போகவென்று விடை
யுந் தந்தார் சிறப்புடனே தம்பாதங் கண்டிட்டேனே. 733
கண்டேனே காலாங்கி கடாட்சத்தாலே கருணைபெற
யெந்தனுக்கு விடைதாவென்ன, தெண்டமுடன் விடை
பெற்று நிடததேசம் திரும்பினேன் குளிகைகொண்டு
வெகுகாலந்தான், தண்டுலவு மாலயனைத் தரிசித்தேதான்
சாங்கமுடன் நளபதியைக் காணவென்று, அண்டமுடன்
குளிகையிட்டுராஜதேசமப்பனேவந்திட்டேன்யானும்பாரே

போகர் நளபதியைக் கண்டது

யாரேதான் ராஜாதிசக்கிரவர்த்திப் பரிவான மாளிகை
யுங் கோட்டை கண்டேன், சீரேதான் சித்திராதம் தங்க
மாகும் சிறப்பான கோட்டைகளும் குருந்தக்கல்லாம்,
நேரேதான் வைடூரிய மண்டபந்தான் நெடிதான வாகனங்
கள் சக்கவன்னம். ஊரேதான் பொன்னகரங் கைலையென்
பார் வுத்தமனே நளபதிக்கு யீடாகாதே. 735
ஈடான தேசமது கண்டோருண்டோ யெழிலான
மாபுரமும் தங்கவர்னம், கோடானகோடி பொருளங்கங்
குண்டு குகையுண்டு சுனையுண்டு தடாகமுண்டு, ஊடான
மிருகங்களனேகமுண்டு வுத்தமனே புலிபசுவுமொன்றோ
டொன்று, காடான வனாந்திரத்தி லுறவுகொண்டு
கருணையுட னெப்போதும் குடியுமாமே. 736
ஆமேதான் கோட்டைக்குள் குளிகைபூண்டு
அப்பனே சுரங்கத்தின் வழியாக. நாமேதான் சென்
றல்லோ பார்க்கும்போது நாட்டமுட னரசாட்சுக்கொலுக்
கூடந்தான், போமேதான் கிட்டியல்லோ சென்றுநின்
றேன் பொலிவான நவரத்தினங் கசிதத்தாலே, மாமேதான்
பிரதமைகள் சூழ்ந்துநிற்க மயக்கமுடன் சிம்மதானங்
கண்டேன்தானே. 737

தானான மேற்புறத்தில் பக்கஞ் சென்றேன் தக்கான
கொலுமாளி சலவைக்கூடம், வேனான கற்றூணும்
வயிரக்கல்லாம் வெழிலான பக்கமெல்லாம் பச்சைக்கல்
லாம், மானான தேவதச்சன் மயனினாலே மார்க்கமுடன்
புஷ்பரதமொன்று கண்டேன், கானான கைலாசமென்பார்
தானுங் காசினியிற் கண்டவரை விண்டிலேனே. 738
விண்ணவே தலைவாசல் பக்கம்போனேன் விராஜனிட
காவல் கணமாயிரம்பார், திண்ணமுட னங்கிருந்தார்
தவசியோர்கள் தீர்க்கமுடன் யெந்தனையுங் கண்டிட்டார்
கள், எண்ணமுடன் யானுமல்லோ கண்டபோது எனைக்
கொல்ல திருஷ்டித்துப் பார்த்தாரென்னை, அண்ணலென்
றகாலாங்கிதனை நினைந்தேன் அப்போதே யெந்தனையுஞ்
சூழ்ந்திட்டாரே. 739
சூழவே யடியேனும் கிடுகிடுத்து துப்புறவாய்தான்
பணிந்து சரணஞ்சொன்னேன், தாழவே காவற்காராயிரம்
பேர் சார்புடனே யெந்தனையு மாரென்றார்கள், மீளவே
யானுமல்லோ தீரங்கொண்டு மேன்மையுட னவர்களுக்கு
வதீதஞ்சொன்னேன், ஆளவே யெந்தனையும் வாலார்
கேட்டார் அப்பனே அடிமுதலுமுரைத் திட்டேனே. 740
உரைத்தேனே வதிசயங்க ளெல்லாஞ் சொன்னேன்
வுலகமெலாஞ் சென்றதொரு கீர்த்திசொன்னேன், இரைத்
தேனே தேசத்திலுளவுமாற்க மெழிலாகக் கேட்டவுடன்
கிருபைகூர்ந்து, வரைத்துடனே யெந்தனையுமழைத்துமே
தான் வாகாகக் கோட்டைக்குள் கொண்டுசென்று, நிரைத்
துடனே சித்தர்முனி காவற்காரர் நிறையுடனே காண்பித்
தாரதீதந்தானே. 741
தானான நளபதியின் கிடாரங்கண்டேன் தாக்கான
சுரங்கத்தினுளவு கண்டேன், வேனான பச்சையென்ற
மாளிகண்டேன் வெழிலான கெம்பினிட மதிலுங்கண்
டேன், மானான தன்வாசல் நான்குபக்கம் மன்னனிட
காவல்களாஞ் சிங்கமுண்டு. பானான பதிலோரம் கானா
ருண்டு பக்கமெல்லாந் தேக்கினிடக் காடுமாமே. 742
காடான கோட்டைக்குள் மானியேழு கருவான
மண்டபங்க ளனேகமுண்டு, வீடான மாபுரத்தில் சித்தர்
கோடி விடுதியாய்த் தாமிருப்பார் கூறப்போமோ, நீடான
மலையுண்டு சுனையொன்றுண்டு நித்தியமும் சித்தர்முனி
வாசஞ்செய்வார், நாடான மனிதர்களுங் காணமாட்டார்
நாட்டிலே கண்டவர்க ளில்லைதானே. 743
இல்லையே யின்னமொரு மாற்கங்கேளும் யியலான
ராஜனிடதேவி கோட்டை, பல்லையாம் வெகுதூரங் காந்த
மாகும் பாரினிலே ராசர்கட்கு கிட்டுமோசொல், மல்லவே
தமயந்தி பூணாரந்தான் மாற்கமுடன் கண்டுவந்து யேங்கி

நின்றேன், சொல்லவே பூணுரங் தன்னைத்தானும் சூட்ச முடன் கண்டுவந்தேன் போகர்தாமே. 744

தாமேதான் சித்தர்முனி ரிஷிகள்தாமும் தயவுடனே யெந்தனுக்கு வதீதஞ்சொன்னுர், போமேதான் குகை முதலும் கிடாரந்தன்னை பொங்கமுடன் தான்கொண்டு காண்பித்தார்கள், நாமேதான்கண்டு மனமுவந்து மெத்த நாதாக்கள் கிருபையது மிகவும்பெற்றேன், ஆமேதான் விசுவாச மருளும்பெற்று அப்பனே சீனபதியமர்ந்திட் டேனே. 745

போகர் அகஸ்தியர் மலைகண்டது

அமர்ந்திட்டே னின்னமொரு மார்க்கங்கேளு அப் பனே குளிகையது பூண்டுகொண்டு, தமர்ந்திட்டவகஸ்தி யனுர் மலையைக் கண்டேன் தக்கான மலையோரம் சென்ற போது, கமர்ந்திட்ட சித்தர்முனி கோடான கோடிக்கண் டிட்டா ரெந்தனையும்பார் நீயென்றுர், சுமர்ந்திட்ட காலாகி நாதர்பாதம் சுடரொளியின் பாதம்புயத்தை நினைத்தேன் பாரே. 746

நினைத்துமே காலாங்கி சீஷனென்றேன் நேரான போகரிஷி யென்பேரென்ன, முனைத்துமே சித்தரெல்லா மொன்றுய்கூடி முனையான வகஸ்தியனுர் பக்கள்சென்று திளைப்புடனே வாய்பொத்தி கரங்குவித்து தேவனே சாஷ்டாங்கஞ் சரணமென்றுர் பனைப்புட னகஸ்தியருங் கண்டுமேதான் பட்சமுடன் தானுரைப்பார் சித்தர்தாமே.

சித்தர்முனி ரிஷிமுதலோ ரொன்றுய்க்கூட்டி தெட்சணு மூர்த்தியிடம் வந்ததென்ன, சத்முடனெல்ல வருமொன்றுய்ச் சேர்த்து சதாசிவவே சுடரொளியே தயாளவானே, பத்தியுடன் காலாங்கி சீஷனென்று பாரி னிலேபேர் படைத்த சித்துவொன்று, முத்திபெற தங்க ளிடங் காணவென்று முறைமையுடன் குளிகைகொண்டு வந்திட்டாரே. 748

வந்திட்டா ரென்றலுமே கும்பமுனி வாகுடனே வருக வென்று விடைதந்தாரே, பந்திட்ட யெந்தனையும் பட்சம் வைத்துப் பாருடனே குகைக்குள்ளே கொண்டு சென்று, முந்திட்ட சாத்திரங்க ளெல்லாங்கேட்டா மோசமில்லை யென்றெனைக் கொண்டாணைத்து, தந்திட்டா ரெந்தனுக்கு நாலுமீய்ந்தார் சதகோடி வித்தைகளுங் கற்பித்தாரே. 749

கற்பித்தார் பிரமமென்ற வித்தைதானும் கருவான யேமத்தின் வித்தைதானும், உற்பித்த சாத்திரத்தி னுளவையெல்லா மொன்றுகத் தானெடுத்து வுபதேசித் தார், மற்பித்தகருவு கரணுதியெல்லா மார்க்கமிடன்றுண் கொடுத்தா ருவமையாக, கற்பித்து செய்துமல்லோ புத்தி கூறிசகல கலைக்கியான மோதிட்டாரே. 750

ஓதவே யடியேனுக் குறுதி சொன்னுர் வுத்தமனே போகரிஷி சொல்லக் கேளும், நீதமுடன் சாஸ்திரங்கள் எல்லாம் கற்றீர் நிலையான காயத்தை நிறுத்தக் கண்டீர், தோதமுடன் சித்தருட குளிகை கொண்டீர் தோராத கீர்த்தியுடன் சீனம் சென்றீர், பாதமுடட காலாங்கி யரு ளும் பெற்றீர் பட்சமுடன் சித்தருட வரங் கொண்டீரே.

கொண்டீரே போகரென்ற பெயருங் கொண்டீர், குவ லயத்தில் சித்தருட மகிமை கண்டீர், அண்டரண்ட சரா சரங்க ளனைத்துங் கண்டீர் ஆகாயப் பூமிமுத லுளவா ராய்ந்தீர், திண்டமுடன் ராஜாதி ராஜர் சேர்வை திற முடனே யவர்கள் வைத்த கிடாரங் கண்டீர், மண்டபங்கள் தடாகமுதல் குகையுங் கண்டீர் மன்னவர்கள் ராச்சியங் கள் கண்டீர் பாரே. 752

கண்டதினுல் கீர்த்தியுண்டு குற்ற மில்லை கைலாச நாதரைப்போல் சித்த ரப்பா, மண்டபங்கள் கடலோரம் ரிஷிகள் தானும் மகாகோடி மகானுக்கள் மிகவுண் டப்பா, மதண்டமுட னுந்தனுக்கு சாப மீவார் தெளிவாக ரவர்க ளிடஞ் சொல்ல வேண்டாம், அண்டர்முனி போலவரும் வதீதம் கேட்பார் அப்பனே தாள்பணிந்து வுரை சொல் வீரே. 753

சொன்னதினுல் சாபமதது கிட முருது தொல்லுலகி லுன்னையொரு சித்த னென்பார், நன்னயங்கள் தாமுரை த்து நலமும் பேசி நாட்டிலுள்ள வளப்பமெலாங் கண்டா ராய்ந்து, வின்னமிலா வரமுடனே சாபம் நீக்கி வேதாங் தத் தாயினது அருளும் பெற்று, முன்னமாய் பெரியோர் கள் வரமும் பெற்று முகைமையுட ஞசிரம வருள் தந்தாரே.

போகர் இரத்தினகிரி கண்டது.

அருள்பெற்று போகருமே சீனஞ் சென்று அங்ங னவே போயிருந்து சிலது காலம், தெருளுடனே வித்தை யெல்லாம் செய்து பார்த்து தேவதைகட் கொப்பான மாங் தருக்கு, பொருளுடைய கருவான வதீத வித்தை புகட்டி னுர் சீனமென்ற மாத ருக்கு, இருளகலப் போதித்துப் போகர் தாமும் யெப்போதும் போலாகப் பறந்திட் டாரே.

பறந்திட்டார் சீனபதி விட்டு நீங்கி பாங்குடனே குளி கையது பூண்டு கொண்டு, மறந்திட்ட காலாங்கி தனை நினைந்து மார்க்கமுடன் இரத்தினகிரி மலைமேற் சென்று, துறந்திட்ட சித்தர்களைக் காண வென்று துரைராஜர் வீற் றிருக்கும் பக்கல் சென்று, நிறைந்திட்ட முனிவரிடம் நின்று பேச நீனிலத்தில் போகரையா ரென்றிட் டாரே.

என்னவே யடியேனுந் தாள் பணிந்தேன் யெழிலான காலாங்கி தனை நினைந்தேன், சொன்னதோர் சித்தர்கட்கு விடையுஞ் சொன்னேன் சுடரொளியாங் காலாங்கி சீஷ

னென்றேன், நன்னயமா யெனையழைத்து குகையிற் சென்று நாதாக்க ளிருப்பிட முங் காண்பித்தே தான், பன்னயமாஞ் சித்தர்களின் மறபுஞ் சொல்லி பட்சமுட னெந்தனுக்கு வழி சொன்னாரே. 757

வழியுடனே யிரத்தினகிரி மேலே சென்றேன் வாகுடனே ரத்தினமென்ற கிரியிற் கண்டேன், அழியாத வாஸதான கோட்டை கண்டேன் அதற்கப்பால் திருமாலின் கோயில் கண்டேன், குழிபோலக் குகையுடனே புனலொன்றுண்டு கூரான மச்சமுனி சித்த னுண்டு, வழிபோகக் காண்பதற்கு துரையு மில்லை வகத்தான சித்தர் முனி காவல் தானே. 758

தானான காவலிடம் சென்று போனேன் தயவாக எந்தனையுங் கண்டிட் டார்கள், மானான மச்சமுனி யெங்கே யென்றேன் மகத்தான சித்தர்களுங் கொண்டு சென்றார், வேனான மச்சமுனி கண்ட போது வெகுவெகுவாய் யெந்தனிட மவர் சொன்னாரே, பானான திருமூலர் பாட்டரெங்கே பார்த்து நெடுநாளாச்சு யென் றிட் டேனே. 759

போகர் திருமூலர் பாட்டரை சமாதியில் கண்டது.

என்றையிலே போகரிஷி சொன்ன போது யெடுத்துரைத்தார் திருமுகங்க ளனேக முண்டு, நின்றையிலே சமாதியிடங் கொண்டு சென்றார் நிலையான ரத்னகிரி மலையோரந்தான், நன்மைபெற திருமூலர் பாட்டர் தம்மை நாதாந்த சித்தொளிவைக் காண வென்று, தன்மையுடனவர்பாதம் தொழுதுநின்றேன் க்ஷணத்திலே சமாதியது வெடிப்புண்டாச்சே. 760

ஆச்சப்பா சமாதியது வெடிக்கக் கண்டேன் அப்பனே திருமூலர் பாட்டர் கண்டேன், மூச்சப்பா தானடங்கிப் பூமிக்குள்ளே மூன்றுயுகந் தானிருந்த சித்து தன்னை, பேச்சப்பா வெகுபேச்சு பேசுதற்கு பீடமுதல் தலைவாசல் முன்னே நின்றேன், நீச்சப்பா வாசனைக ளொன்று மில்லை நிலையான கற்பமுண்ட காய மாமே. 761

காயமது வாசனைகள் கூறப் போமோ கடும்பச்சைப் பூரமென்ற வாடை வீசும், நேயமுள்ள மல்லிகைப்பூ மணம் போலெங்கும் நெருங்கவே வொட்டாது குகையி னுள்ளே சாயமென்ற தேகமது குங்குமம் போல் தரிசிக்க மானிடர்க்கு கிட்டுமோ சொல், மாயமென்ற சித்தொருவர் மகிமை சொல்ல மாளாது வையகத்தில் மாளாதாமே. 762

மாளாத சித்தென்னைக் கண்ட போது மகிதலத்தில் யாரப்பா காண வந்தீர், சூளாத செனனமில்லாச் சமாதி யுள்ளே சூட்சமுடன் வந்தலுவ லென்ன வென்றார், கோளானவார்த்தைகளும் பேசவேண்டாம் குறிப்புடனே யிரண்டொரு வார்த்தைகள் சொல்லி, தாளான சமாதி

தனை மூடிப்போடு தரணியுள்ள சித்தரெல்லாம் வருவார் தாமே 763

வந்தாரேயாமானால் கேள்வி கேட்பார் வளமுடனேயவர்களுக்கு விடைசொல்லவேண்டும், சிந்தனையை யான் மறந்து பேசவேண்டும் பேசாட்டாலவர்களுக்கு மனநோயுண்டாம், பாங்கான மூலவர்க்கக் கோடியுண்டு பந்து பந்தாய் வருவார்கள் சமாதியண்டை தொந்தரவு யெனக்கல்லோமிகுதியாகும் துரைராஜசுந்தரனே சமாதிமூடே.

மூடனென்று சொல்லுகையிலடியேன் தானும் முடி வணங்கிதெண்டனிட்டு கெதியேதென்ன. நாடென்ற பதிதனிலே வாழுஞ்சித்தர் நாமிருக்குமிடந்தனையே யறியமாட்டார், மாடென்ற மனிதரப்பாமுழு மக்கள் தாமு மடையர்களோ கோடானகோடி பேர்கள், கூடென்றகூடு விட்டுப்பாய்ந்தேனென்று குவலயத்தில் கூக்குரலு மிக வுண்டாச்சே. 765

ஆச்சதினாலெந்தனையு மனேகம்பேர்கள் அதிசயமாய்க் காணவே வருவார் மாண்பர், மூச்சடங்கி மூன்று யுக மிருந்தேனப்பா முனையான காலாங்கி சீஷன்தானும், பாச்சலுடன்குளிகையது பூண்டுகொண்டு பட்சமுடன் வந்ததொரு சோதிதன்னால், காச்சலுடன் மூடிருந்த சமாதி தானும் கடுகெனவே வெடித்துமல்லோ காணலாச்சே. 766

கண்டதினாலுந்தமக்குக் கருணைகூர்ந்து கடாட்சித்தேன் திருமூலர் பாட்டர் தானும் விண்டதிலை யொருவருக்கும் ரகசியார்த்தம் வேதாந்தாந்தத்தாயின துகடாட்சத்தாலே, மண்டலத்திலுந் தனுக்கு வுபதேசித்தேன் மானிலத்தில் குளிகையது பூண்டுகொண்டு, தொண்டமுடன் சித்தர்களை வணங்கி நீயும் தேசமெலாங் குளிகை கொண்டு திரிவாய் நீயே. 767

திரியென்ற போதையிலே விடையும் பெற்றுத் திரும்பினேன் சீனபதி குளிகை பூண்டு, நெரியென்ற சத்தியத்தைக் கைவிடாத நேர்ப்பான வெள்ளையென்ற மாந்தர் முன்னே, பரியென்ற கருவி கரணாதியெல்லாம் பாங்குடனே வுபதேசம் செய்தேன்யானும், சரியென்று யெங்தனையுமாசீர்மித்து சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்திட்டாரே. 768

செய்தபின்புவடியேனுஞ் சீனந்தன்னில் சிறப்புடனே சிலகால மிருந்தேனப்பா, மெய்யுடனே இன்னம் வெகு தேசம்காண மேதினியில் குளிகையது பூண்டுகொண்டு, கைதவமாய் சீனபதிவிட்டு நீங்கி காலாங்கிநாதர்பதம் மனதிலுன்னி, பையவேயானுமல்லோ பறந்தேனப்பா பாரினிலே வயோத்திநகர் கண்டிட்டேனே, 769

போகர் அயோத்தியில் திருச்சங்கு சமாதிகண்டது

கண்டேனே திருச்சங்கு சமாதிகண்டேன் கடலோரம்
போயிறங்கி நின்றேனப்பா, அண்டர் முனிராட்சதர்களி
ருக்குங் கூட்டம் அணியணியாயவர்பாட்டன் சமாதி
கண்டேன், தண்டுடனே ராட்சதான் கூட்டம்பக்கல் தாழ்
மையுடன் போயிருந்து தெண்டஞ்செய்தேன் கொண்
டென்னை தானனைத்து ராட்சதாக்கள் கொண்டுபோய்
சமாதியிடம் விட்டிட்டாரே. 770

விட்டவுடனடியேனுந் தாள் பணிந்து விருப்பமுடன்
காலாங்கிதனை நினைந்தேன், கிட்ட நின்று பாலனுமே
சிரங்குவித்துக் கிருபையுடன் திருச்சங்கைக்காண
வென்று, திட்டமுடன் முழங்காலு சமாதியிட்டுத் தீவிர
மாயடிதொழுது போற்றிநின்றேன், சட்டமுடன் சமாதி
யது தாள் திறந்து சடுக்கெனவே சத்தமது கேட்டிட்
டேனே. 771

கேட்டவுடனடியேனுங் கிடுகிடுத்து கிருபையுடன்
சாஷ்டாங்கஞ் சமர்ப்பித்தேதான், வாட்டமுடனெந்தனை
யாரென்றுகேட்க வளமுடனே சிறு பாலனுரைக்கலுற்
றேன், பாட்டரென்ற திருச்சங்குராஜன் தன்னை பாரி
னிலே காண்பதற்கு மனமுவந்து, நோட்டமுடன் சமாதி
யிடம் வந்தேனென்று நுட்பமதய்போகரிஷி வுரைத்திட்
டேனே. 772

உரைத்தேனே யெந்தனிட தீரத்தாலே வுத்தமனே
காலாங்கி கடாட்சந்தன்னால் திறப்புடனே காலாங்கிசீஷ
னென்றேன் திகழுடனே சீர்பாதங் காணவென்று மரைப்
புடனே குளிகையது பூண்டுக்கொண்டு மார்க்கமுடன்
சீனபதிவிட்டு நீங்கி, விரைப்புடனே சமாதி யிடங்கண்டு
வந்து விருப்பமுடன் வந்தேனே போகர்தானே. 773

திருச்சங்கு போகருக்கு புத்தி கூறல்

தானான போகமென்ற போதேயப்பா தயவுடனே
வென்மீதில் பட்சம்வைத்துக், கோனான திருச்சங்குராஜன்
தானும் கொற்றவனு ரெந்தனுக்கு வுபதேசித்தார், பானு
னபுத்திமதிமிகவுரைத்து பாங்குடனே குளிகை கொண்டு
போமிடத்தே வேனுனசித்தர்முனி ரிஷிகள் தாமும்வேணு
மென்றே சபித்திடுவார் தப்பிக்கொள்ளே. 774

கொள்ளுவது வுந்தனுக்கு புத்திமார்க்கம் கோளாறு
நேராமல் சித்தர்முன்னே, எள்ளளவும் பிசகின்றி நடந்து
கொள்வாய் என்பேரா வுந்தனுக்கு சாபமில்லை, கள்ள
மனமுடையதொரு சித்தரப்பா கண்டாலே வுன்னையுஞ்
தான் சபிப்பார் சித்தர், உள்ளபடிபோலாக வுறவுபேசி
ஒரு கடிகை நேரமதில் சபிப்பார் பாரே. 775

பாரென்ற போதையிலே யானடுங்கி பட்சமுடன்
பாட்டரையான் பரிவுகேட்டேன், ரென்ற செதியெனக்கு
பாட்டாரென்றேன் விருப்பம்வைத்து யெந்தனுக்கு
ஞானோபதேசித்தார், சீருடனே யடியேனும் நடுநடுங்கி சிறப்
புடனுபதேசம் பெற்றுக்கொண்டு, பேருடனே காலாங்கி
தனை நினைந்து பேரின்ப சாகரத்தை யடைந்திட்டேனே.

போகர் கமலமுனியைக் கண்டது

அடைந்தபின்பு குளிகையது பூண்டுகொண்டு அரச
னுய் திருச்சங்கு விடையும்பெற்று, கடந்துமே யயோத்தி
னகர் தன்னைவிட்டுக் காலாங்கி நாதருட கிருபையாலே
தொடர்ந்துமே சீனபதிக்கேகி யானும் துப்புரவாய் கமல
முனிபக்கல் சென்றேன், நடந்ததொரு சங்கிரகம் யானு
ரைத்தேன் நவமுடனே கமலமுனி மகிழ்ந்திட்டாரே. 777

மகிழவே யடியேனும் விடைகள்பெற்று மார்க்க
முடன் வெள்ளையென்ற மனிதர்பக்கம், நெகிழவே
போயிருந்து யாவுஞ் சொன்னேன் நெடிதான கருவிகர
ணுதியெல்லாம், மகிழவே முடித்திட்டேன் தலைகீழாகச்
சதாகாலம் வெள்ளையென்ற மனிதருக்கு, புகழவேசீனபதி
யோர்கள்மெச்ச புகட்டினேன் விநோதமென்ற வித்தை
தானே. 778

தானான விநோதமென்ற வித்தையப்பா தாரணியில்
செய்தவரும் பார்த்தோரில்லை, கோனான குருவருளால்
குளிகைபூண்டு குவலயங்கள் சுற்றியல்லோ முழுதும்
பார்த்தேன், பானான கற்றவித்தை வீண்போகாமல் மாரு
மல் சதாகால மென்பேர்கூற வேனான வித்தைகளை
விரும்பியானும் விபரீதமாகவல்லோ விரித்திட்டேனே.

விரித்துமே சீனபதி தன்னில்யானும் வெகுகாலம்
நானிருந்தேன் மைந்தாகேளு, நெரித்துமே மறுபடியும்
குளிகைபூண்டு நேராகசீனபதி விட்டுநீங்கி, புரித்துமே
சத்தியரிச் சந்திரன்றன் புகழான சமாதியிடங் காண
வென்று, தெரித்துமே வயோத்திநகர் வடபாகத்தில்
திறமுடன் சமாதிகண்டு புறப்பட்டேனே. 770

போகர்சத்திய அரிச்சந்திரன் சமாதிகண்டது

புறப்பட்டேன் குளிகைகொண்டு பறந்தேனப்பா
பொங்கமுட னயோத்திநகர் வடபாகத்தில், துறப்புடனே
சமாதிபுறம் காணவென்று துப்புறவாய் நதியோரம்
போனேன்யானும், முறப்புடனே கிங்கிலியர் கோடா
கோடி மூர்க்கமுடன் காவற்காரங்கிருந்தார், சிறப்புடனே
யடியேனுங் காலாங்கிதன்னை சீர்பாதந்தனை நினைந்து
கண்டிட்டேனே. 781

கண்டவுடன் கிங்கிலியரா ரென்றூர்கள் காலாங்கி
வையருட சீஷனென்று, தெண்டமுடன் றிருச்சங்கு பேர

னென்று தீவிரமாய் முறைகொண்டு செப்பலுற்றேன், மண்டலங்கள் யான்முழுதும் குளிகைபூண்டு மானிலத் தில் சுத்தியல்லோ வரிசைபெற்றேன், குண்டலங்கள் சரப்பளிகள் பதக்கம்யாவும் குவலயத்தி லெனக்களித்து போவென்ருரே. 782

என்ருர்கள் மனுகோடி சித்தர்கூட்ட மெழிலுடனே ரிஷிகள் முதலாசீர்மித்தார், குன்ருன மலைநதிகள் குகைகள் போனேன் கோடிவரை வெகுகாலமிருந்து பார்த்தேன், பன்ருனசீனபதி தலைமையென்று பாங் குடனே குளிகையது பறந்திட்டேன்யான், நன்ருன கமல முனிசித்தர்தம்மை நலமுடன் சீனமதில் பார்த்திட்டேனே.

பார்த்தேனே வெள்ளையென்ற மனிதரப்பா பரிவாக பூமியெல்லாங் காரமாகும், நிர்த்தமுடன் பொய்கை யொன்று சுனையொன்றுண்டு திகழான படியோரம்சித் தொன்றுண்டு, ஊர்த்தமுடன் சமாதியிலே யிருந்தாரப்பா வுவமையுட னவர்பாதங் கண்டுவந்தேன், ஏர்த்தமுடன் வரரிஷியாமவர் பேராகுசமழிலான மார்க்கமெனக் கோதிடிடாரே. 784

ஓதவே சிறுபாலன் விடைகள்பெற்று வுகமையுட னனேகவித நூல்கள் பார்த்தேன், நீதமுடன் வரரிஷியார் நூலில்சொன்ன நுட்பமாமரிச்சந்திரன் சமாதிகாணு, வேதமுதலாராய்ந்துங் காணவில்லை வெளியான வரரிஷி யின் நூலிற்சொன்னுர், பாதமுடன் சத்தியரிச்சந்திரன் றன்பாதம் புயத்தைக் காணவென வந்திட்டேனே. 785

என்னவே யடியேனும் போகர்நாயன் யெழிலாகத் தானுரைத்தேன் யிரக்கம்வைத்து, சொன்னபடி விதி முறையின் நுணுக்காராய்ந்து சுடரொளியின் காலாங்கி சீஷனென்றும், நன்னயமாப் ரிஷிமுனிவர் சித்தர்தம்மால் நயமுடனே பலபேரின் வரமும்பெற்றேன், வன்னமுட னரிச்சந்திரன் சமாதிமாற்கம் வகையுடனே காணவென்று வழிகேட்டேனே. 786

வழிகேட்டேன் துறைகேட்டேன் வன்மையுடன் யெந்தனுக்குப் பட்சம்வைத்து, மொழியுடனே காலாங்கி சீஷனென்று முறைகொண்டு வந்ததினுல் போகருக்கு பழியுண்டா மென்றல்லோ பயந்தெல்லோரும் பாராளு மரிச்சந்திரன் சமாதிதன்னை, குழியுடனே தானிருக்குங் குகையினுள்ளே கொண்டுபோய்விட்டார் கிங்கிலியர் தாமே. 787

விட்டவுடன் போகரும்யான் முன்னேசென்று விரைவுடனே தான்பணிந்து கரங்குவித்து, பட்டமன்னன் கொலுவினிட சமாதிபக்கம் பாங்குடனே நிற்கையிலே சித்தர்கூட்டம், திட்டவந்துயென்னை யாரென்றுகேட்க

கீர்த்திபெற்ற காலாங்கி சீஷனென்றேன், சட்டமுட னென்னை யவர்பட்சம் வைத்து சாங்கமுடனுசீர்மஞ் செய் தார்தாமே. 788

தாமேதானனே கவித தர்க்கஞ் சொன்னுர் தாழ்வா கயானுமல்லோ வெடுத்துரைத்தேன், போமேதான் சமாதி யிடம் செல்க வென்ருர் போனேனே ஓங்காரஞ் சத்தங் கேட்டேன், வாமேதான் வாத்தியங்கள் கோஷ்டம்போல வளமையுடன் விநோதவகை வரிசைகேட்டேன் நாமேதா னிருக்குமந்த காலந்தன்னில் நலமாகச் சமாதியது திறக்க லாச்சே. 789

சமாதி திறந்தது

திரக்கையிலே சத்தி யரிச்சந்திரன்றன் திறலான சமாதியது யென்னசொல்வேன், சுரங்கமுடன் சுடகராளி போல் காணலாச்சு சூக்கும மாங்தேக மதுமின்னல் போலாம், இரங்கவே மூன்று படிகடந்து போனேன் இராஜனு மரிச்சந்திரனருகிற் சென்றேன், வரங்கொண்ட வரிச்சந்திரனெனைப் பார்த்து யாரப்பாவந்தவனீ ரென்ருர் பாரே. 790

பார்க்கவே பாலனுமே கால்நடுங்கி பராளும் ராசனுக் குப் பதிவு கூற, ஏர்க்கவே முடியாமல் மைந்தாயானும் யெழிலாகக் காலாங்கிசீஷனென்றேன், தீர்க்கமுட னவர் தானு மென்னைப் பார்த்து திறமுடனே யவரெனக்கு வுரைத்தவாறு, மார்க்கமுடனென் தகப்பன் திருச் சங்கு தானுமகத்தான சமாதியிலே போனுர்தாமே. 791

போகையிலே காலாங்கி சமாதிதன்னைப் பொங்கமுட னவர்போய்க் கண்டதுண்டு, சாகையிலே யிடமவர்க்குத் தெரியும்பாலா சதகோடி யுகமதுவுஞ் சென்றுபோச்சு, ஆகையினுலுந் தனக்கு யானுஞ் சொன்னே மப்பனே போகரிஷிவன்பதாக, வேகையிலே புறங்காடு சுடுகா டப்பா வெகுகாலம் யானுமல்லோ காத்தேன் பாரே. 792

காத்தேனே மேதினியில் மெய்யொன்றுக்காய் கன மழிந்து காடுறைந்து கடந்துநின்றேன், நாத்தமுடன் சுடுகாடு காத்திருந்து நலமுடனே பிள்ளைமுதல் மனைவி தோத்தேன், பூத்தமலர்முச்சு குணதேவி தன்னை பொற் காசு விசுவாமிக் கடனுக்காக, தோத்தேனே ஞடுமுதல் நகரமெல்லாந் தொலைத்தேனே சமுசார தொல்லைதாமே.

தொல்லைவிட்டு சமாதிக்குட் சென்றேனப்பா தொல் லுலகில் மற்றொன்றுமில்லை கண்டீர், அல்லலெனு மர சாட்சிவிட்டு நீங்கி அப்பனே சமாதியிடங் கண்டேனென் ருர், மெல்லவே சதாகாலம் பூமிதன்னில் மேனியிலிருந் தோர்க்குப் பலனென்றில்லை, வெல்லவே பூலோகமாய் கைவிட்டு விருப்பமுடன் சமாதிதனி லிருக்கநன்றே. 794

அரிச்சந்திரனிடம் போகர் வுபதேசம் பெற்றது

இருக்கவென்ற வார்த்தையது கேட்டபோது யென் மகனே யென் புத்திலயித்துப்போச்சு, பொருத்து முடி போகவில்லை பூமியாசை பொன்னுலகம் காணபதுவே புண்ணியந்தான், திருத்தமுட னிவ்வுலகிருந்துமென்ன திரள்கோடி வித்தைகளுங் கற்றுமெள்ள, வருத்தமுடன் குளிகையிட்டு பறந்துமென்ன வாகுட னுலகமதிலொன்றுங்காணே·
795

காணேமெ யென்று மல்லோ கலங்கிகின்றேன் காலங்கி நாதருடகிருபையாலே, தூண துபோலங் கிருந்த விருட்சந்தன்னில் சுடரொளிபோல் சோதியது காணலாச்சு, வீணையுடன் வாத்தியங்கள் முழங்கலாச்சு வேதாந்தத்தாயினது மகிமையப்பா, நாணமுடன்பார்த்து முனிசித்தரப்பா நடுக்கமுடன் ருனடுங்கி 'பயந்திட்டாரே.

பயந்திட்ட சித்தர்களை யான் வணங்கி பரிவாகசிரங் குவித்து வணக்கஞ் செய்து, நயமுடனே வதிசயங்கள் கேட்கும்போது நாதாந்தத் தாயினது பிரகாசந்தான், மயமுடனே சத்தியரிச்சந்திரற்கு மகிமையுட னெப்போதுங் காட்சியுண்டு, தயவுடனே நிர்வானிருபவாணி சதாகாலங் காட்சியது தருவான்பாரே·
797

தருவாளே மனோன்மணி யுந்திரி காலந்தான் தரணி பதியாளு மரிச்சந்திரற்கு, குருவான சித்தர் முனிரிஷிகளப்பா கூறினுரெந்தனுக்கு வண்மைமெத்த, திருவான வார்த்தையது மிகவுங்கேட்டு தீரனும்ராஜனிட மொழியுங் கேட்டு, மருவாமை வுபதேசமெல்லாம் பெற்று மாற்கமுடன் சீனபதிக்கேகினேனே. 798

போகர் சீனபதிக்கு' வந்தது

ஏகினேன் சீனமென்ற பதிக்குமைந்தா யெழிலான குளிகைகொண்டு பறந்தேனப்பா, பாகமுட னுபதேசம் பெற்ற மார்க்கம் பாங்குடனே வெள்ளையென்ற மனிதரப்பா, வாகுடனே நூல்படியே முறையோதித்து வளமைபெற சமாதிக்கு வழியுஞ் சொன்னேன், வேகுடனே வெகுகால மிருந்தேன்யானும் வேடிக்கை சிமிட்டு வித்தை செய்தேன் தானே. 799

போகர் காத்தாடி வித்தை செய்தது

தானன பிரமகோடி வித்தை செய்தேன் தாக்கான காத்தாடிவித்தை வித்தை, மானன வித்தையிலு மதீத வித்தை மாணுக்கன் புகலுகிறேன் மகிமைகேளு, வேனன பட்டமது கெஜமோ பத்து, வேகமுடன் நீளமது கெஜமோ பத்து, பானன வட்டமது நடுவட்டந்தான் பாங்குடனே வுளவட்ட முழந்தான்ரண்டே. 800

இரண்டான பக்கவட்ட மூன்றேயாகும் மெழிலான நெடுவட்டம் நாலேயாகும், முரண்டான வெளிவட்டம் சக்கரம்போல் மூலத்தின் வுள்வட்டம் கமலமாகும், திரண்டான சுற்றேரம் கம்பியப்பா திரளான கம்பிகளில் காதுரண்டாம், உருண்டான நடுக்கம்பில் சூட்சாதாரம் வுத்தமனே புறவட்டம் வளையமாமே. 801

வளையுடனே ஒவ்வொன்றில் கொலுசுமாகும் வரிகளிலே காந்தமது சத்தேயாகும், களையுடனே நாரென்ற பட்டேயாகும் கம்பிகளில் தையல்களை வோட்டவேண்டும் துலையான கொலுசுகளில் குண்டேயாகுந் தோராத கயறுகளில் சூட்சமாட்டி, முளையுடனே பூமிதனில் கயிறை மாட்டி மூர்க்கமுடன் பறக்குகையில் கயிற்றைத் தட்டே.

தட்டையிலே காத்தாடிதான் பறந்துசந்திரனுர் மண்டலத்தினளவு மட்டும், நெட்டையிலேதான் பறந்து நின்றுவாடும் நிலையான சூட்சாதி சூட்சத்தாலே, முட்டையிலே வுள்ளிருந்த கருவைப்போலு மொருங்குடனே நின்றுடும் நெடுநேரந்தான், சட்டையிலே நாற்பட்டுக் காற்றைக்கொண்டு சடுதியிலே தானெடுக்கும் பான்மைபாரே.

பான்மையாம் வாயுவது மேலாதாரம் பற்றுகையில் காத்தாடி மேலே நோக்கும், வான்மையுட னடுக்கம்பி வட்டந்தன்னில் நயமுடனே சூட்சாதி சூட்சந்தன்னை மேன்மையுடன் கயிர்மாட்டி சுறுக்கும்போது மெல்லெனவே காத்தாடி யிறங்கலாகும், தான்மையுடன் சுக்கானின் சூட்சமப்பா தாரணியிலாரறிவார் விசுவர்தானே·

விசுவனும் தேவகம்மாள் சித்தன் வேணபடிசெய்து மல்லோ சூட்சங்காண்பான், பசுவுடனே கண்சேர்ந்த கதையைப்போல கருத்தறியார் முழுமுடர் காண்பாரே தான், முசுருடைய யிரும்பதனில் காந்தஞ்சேர்ந்து முடித்தார்கள் காத்தாடி விநோதவித்தை, நசுறுண்டாய் சூட்சாதி சூட்சமார்க்கம் நாமுரைத்தபடி யாருக்கண்டிடாரே.

கண்டபடி கருத்துடைய சித்தர்தாமும் காசினியில் செய்தவருங் கண்டோரில்லை, கண்டபடி காத்தாடி சூட்சாசூட்சம் கயிர்நிற்கும் வழியறியார் துறையுங் காணுர், கண்டபடி கருவூரார்செய்து பார்த்தார் கருத்திலே யவர்தனக்குந் தோன்றவில்லை, கண்டபடி யெந்தனுட புத்தியாலே காத்தாடியான் முடித்தேனவனியோர்க்கே.
806

முடித்தேனே சீனமென்ற பதியில்தானும் முனையான காத்தாடி யடிவாரத்தில், படித்தளமாம் தோணியதுமிக போல்கட்டி பாங்கான மாளிகைபோல் தானமைத்து,

குடித்தனமாஞ் சனங்கள் பதினாயிரம்பேர் குடையடியில் தானேத்திக் கொண்டுசென்று, நடிப்புடனே தேவாதி தேவர்தானும் நாணமுற்று பார்த்திடவே நடத்தினேனே.

நடத்தினேன் சீனபதி சனங்களெல்லாம் நலமுடனே காத்தாடி தன்னிற்கொண்டு, திடத்துடனே சீனபதி மூன்றுகாதம் திறமையுடன் சுத்திவந்தேன் சித்தர்மெச்ச வடத்திடமாய் சூத்திரக் கயிர்திரட்டி வாகுடனே சீனபதி யிறக்கிவிட்டேன், தடத்துடனே சீனபதி சனங்களெல் லாஞ் சந்தோஷித்தென்பேரி லன்புற்றாரே. 808

கமலமுனி பரிவு கூறினது

அன்புற்றார் கமலமுனி சேதிகேட்டு அப்பனே போக ரிஷி புகலக்கேளும், வன்புற்ற யிதிகாசவித்தை யெல்லாம் வளமுடனே காட்டிவிட்டால் பூலோகத்தில் இன்புற்று யாரொருவர் மதிக்கப்போறார் யேகவொளியாகிவிடு மன்னாகேளு, துன்புற்று வெந்தணையுஞ் சபிப்பாரப்பா சூட்சரதிசூட்சமதை வெளிகாட்டாதே. 809

கட்டினால் லோகமெல்லாஞ் சித்தாய்ப்போகும் கசட ருக்குகாட்டாதே கருணைபோகும், தாட்டிதமாய் நல் லோர்க்கு கருவிகாட்டு தயையுடனே உபதேசம்யாவுங் கூறும், நோட்டமுடன் முழுமக்க ளொன்றாய்க்கூடி நொடிப்பார்கள் பகடிமெத்தக் கூறுவார்கள் தாட்டி யுடன் புலவோர்க்கு புத்திகூறு சதாகாலம் தானினைப்பார் தன்மைபாரே. 810

இரசசெந்தூரம்

பாரேதா னின்னமொரு மாற்றங்கேளு பாங்கான சூதமது சேர்தானென்று, சீரேதான் நாகமது சேர்தான் பாதி சிறப்புடனே யூகமதாய் வொன்றாய்க்கூட்டி, நேரே தான் வட்டோட்டில் பில்லையூத்து நேர்ப்பாக பில்லைக்கு சுறுக்குதாக்கு, ஆரேதானாதாரச் சரக்காலப்பனே செய நீர்தான் செய்துகொள்ளே. 811

கொள்ளவே செயநீரை சுறுக்குதாக்கு குணமுடனே சூதமது யிருக்கிக்காட்டும், விள்ளவே கிண்ணமதுசாற்ற கேளும் வேடிக்கை சிமிட்டிவித்தை வாதம்பாரு, மெள் ளவேசரக்குவகை யாமுரைப்போம் மேதினியிலார் செய்தா ரிந்தபாகம், துள்ளவே மிறுதாரு சிங்கிதானும் துறை யான துருசுடனே காரமாமே. 812

காரமாம் வீரமுடன் பூரமாகும் கருவான சீனமுடன் பாஷாணந்தான் தாரமாம் கெந்தியுடன் லிங்கந்தானும்

தாக்கான சூடனுடன் கெவிரிதானும், காரமாம் சாந்த முடன் கடிக்காரம்கடிதான சாரமுடன் பூநீராகும், தீரமாய் பவளத்தின் புத்துமாரும் திறமான சலாசத்துப் பலந்தான் தூக்கே. 813

தூக்கவே சரக்கெல்லாஞ் சமனதாக துறையோடு முறையோடும் மொக்கச் சேர்த்து, நோக்கவே குழியம்மி தன்னிலாட்டி நுட்பமுடன் பழச்சாற்றில் நாலுசாமம், தாக்கவே தானரைப்பாய் குமரிச்சாற்றால் தப்பாது தான ரைப்பாய் கையான் சாற்றால், ஊக்கமாய் வகைவகைக்கு நாலுசாமம் வுத்தமனே தானரைப்பாய் மூலியாமே. 814

மூலியாம் கவுதும்பைச் சாறுதானும் முயலான முசல்க்காது சாறுதானும், நீலியாம் அவிரியிடச்சாறு தானும், பாலியாம் குடசப்பால் மூலிதானும் பாங்கான துளசியிடமூலிதானும், வேலியாம் முத்தாமணிச் சாறு நாழி வெளியான கள்ளிச்சார் தானுங்கூட்டே. 815

கூட்டியே வகைவகைக்கு நாலுசாமம் குறிப்புடனே தானரைப்பாய் மூலியாலே, நீட்டமுடன் வெண்ணெயது போலேயாட்டி நினைவுடனே வகல்போல மூசைபண்ணி வாட்டமுடன் மூசையிலே பில்லைவைத்து வாகாகமேல் மூசைதான்பொதிந்து, தேட்டமுடன் மாசீலை வலுவாய்ச் செய்து தேர்ந்துமே ரவிதனிலே காயப்போடே. 816

போடவே சீலையது காய்ந்தபின்பு பொங்கமுடன் சுண்ணாம்பு சீலையேழு, கூடவே சீலையது வலுவாய்ச் செய்து குமுறவே சட்டிதனில் மணலைக்கொட்டி, நீடவே சட்டிநடு கலசம்வைத்து நினைவுடனே மேலுமந்த மண லைக்கொட்டி, சூடவே மேற்சட்டிக் கவிழ்த்துமூடி துப்புர வாய்ச்சிலையது வலுவாய்ச் செய்யே. 817

செய்யவே சீலையது காய்ந்தபின்பு செம்மையுடன் சட்டிதனை யடுப்பிலேற்றி, முய்யவே வாலுகையின்மேலே வைத்து முயற்சியுடன் தீபமது கமலமெட்டு, நையவே தீபமதுகாடோபத்து நயமுடனே தீபமது யெரிப்பாயப்பா, பையவே யாறினபின் னெடுத்துப்பாரு பளிங்கான செந்தூரம் சொல்லொணாதே. 818

சொல்லாலே நாவேது பாவுமேது சுடரொளிபோல் செந்தூரஞ் சொல்லப்போமோ, வல்லவே வருணனிட நிறம்போலாகும் வலுவான சூதமது காரமெத்த, மெல் லவே ஓடதனைத் திறந்துபாரு மேலானசெந்தூரம் தீதப் போக்கு, புல்லவே முடியாத சித்தர்தாமும் புகலார்கள் லோகத்து மாந்தர்தாமே. 819

ஆமேதான் செந்தூரம் பதனம்பண்ணு அப்பனே நாதாக்கள் காண்பாராகில், போமேதான் விடுவாரோ போக்கோடே கொடுபோகும் வழியைப்பார்ப்பார்; நாமே தானுந் தமக்குச் சொன்னேமப்பா நாட்டிலே யாரேனுஞ் சொல்வாருண்டோ, வேமேதான் செந்தூரம் குன்றி யுண்ணுவெகு கோடிகால வரையிருக்கலாமே. 820

இருக்கலாம் கற்பாந்திர காலமட்டும் யிளப்பில்லே தவிர்ப்பில்லே ஈளையில்லே, முறுக்குடனே தேகமதுயிறு கிக் காட்டும் கூதண்டங்கொண்ட வருமுமக் கீடுண்டா, பொறுக்கவே முடியாது வன்னிமீறும் பூதலத்தில் நீயு மொருசித்தனுவாய், வெடுக்கவே சமுசாரமாய் கைதன்னை விட்டொழித்து நிற்பதுவே சமாதியாமே. 821

ஆமென்ரு லின்னமொரு வயணங்கேளு அடவான செந்தூரங்க ளஞ்சிதானும், போமென்று விடுகாதே மைந்தாகேளு போக்கான சூதமது செந்தூரத்தை நாமென்ற வாக்கியமும் பொய்க்காமற்ருன் நலமுடனே வெள்ளிதனில் நூற்றுக்கொன்று, தாமென்ற வுருக்கு முகந் தன்னிற்ருனுந் தப்பாதுதான் கொடுக்கமாற் றெட் டாமே. 822

எட்டான மாற்றதுவும் பசுமைமெத்த ஏற்றமுடன் ரவிதனிலே நூற்றுக்கொண்டு, மட்டாகத் தானுருக்கி கொடுத்துப்பாரு மகத்தான வர்னமது சிவப்புமெத்த, வட்டான மாற்றதுவு மெட்டரையுமாகு மகத்தானவேதை யிது கிட்டுமோ சொல் திட்டான வெளிசெம்பில் கொடுத் துப்பாரு திறளான செகசோதி தெளிவைப்பாரே. 823

தெளிவான மாற்றதுவு மொன்பதாகும் தேசத்தில் கிட்டாது யார்க்குக்கிட்டும், ஒளிவான சித்தர்முனி ரிஷி கட்கப்பா வுத்தமனே கிட்டுமது சிவயோகிக்கும், வளி யான முறைப்படியே கண்டாராய்ந்து வகுப்புடனே சித்த ரிடநூலும் பார்த்து, நெளிவான நூல்களெல்லா முளவா ராய்ந்து நேர்ப்புடனே சோதித்தேன் மாந்தற்காமே. 824

மாந்தர்கள் பிழைக்கவென்று வடியேன்தானும் வளப்பமுடன் காலாங்கி நாதர்பாதம் சாந்தமுடன் சீற்பா தம் தனைநினைத்து சாற்றினேன் லோகத்து மாண்பருக்கு; வேந்தனெனும் ராஜாதிராஜர்கட்கும் வெகுதூரம் கடந்து சென்ற ஞானிகட்கும், போந்தமுடன் போகரிஷியடியே யானும் போதித்தேன் வெள்ளையென்ற மனிதற்காமே.

ஆமென்ற வித்தங்கம் அருமையப்பா யாராலுங்கண் டறிவகதளிமையாகும், நாமென்ற சூதத்தினுட்டுதன்னை

நயமுடனே காரசாரங்களாலே காமென்ற சத்துருமித் துருகளாலே கருவிகரணுதியின்றன் போக்கறிந்து, வேமென்ற குறுக்குவழி போக்குப்பாதை வெகுதூரமறிந் துமல்லோ சாற்றினேமே. 826

சீனவீரவைப்பு செந்தூரம்

போற்றினே மின்னமொரு கருமானங்கேள் பொங்க முடன் வீரமென்ற செந்தூரந்தான், மாற்றமுடன் வில்வத் தின் றயிலத்தாலே மயங்காமல் சுறுக்கிடவே கட்டிப் போகும், கூற்றமுடன் மேற்போக்கு புகல்வோர் கண்டீர் போக்கான சரக்குவகை நிற்கப்பாரும், தோற்றமுடன் தாரமொன்று துத்தமொன்று தெளிவான சிங்கியொன்று கெவுரியொன்றே. 827

ஒன்ருன அயமதுவுஞ் செம்புவொன்று வுத்தமனே பொடிபொடியாய் ராவிக்கொண்டு, பான்ருன சரக்கு களுஞ் சரியதாக பண்பாகக் குழிக்கல்லிலிட்டு மைந்தா, யொன்ருகத் தளரவிட்டு மாவதாக்கிப் பொங்கமுடன் காலனென்ற செயநீர்தானும், தன்ருன வறுவகையாஞ் செயநீர்தன்னுல்,தன்மையுடன் ருனரைப்பாய்சாமம்நாலே.

நாலான செயநீரில் மைந்தாகேளு நலம்பெறவே தானரைப்பாய் மைபோல்தானும், மாலான செப்பகலும் வொன்றுசெய்து மார்க்கமுடன் வகலில் சரக்கைப்பூசி, வேலான ரவிதனிலே காயப்போடு வெளுமையுடன் காய்ந்தபின்யு விபரங்கேளு, சாலான வகல்தனிலே வீரம் வைத்துச் சார்புடனே சீலையது வலுவாய்ச் செய்யே. 829

செய்துமே ரவிதனிலே காயவைத்து செம்மையுடன் தளவாயாஞ் சட்டிதன்னில், பெய்துமே வுப்பையரவாசி யிட்டுப் பேரானவீரத்தை நடுவேவைத்து, கைமுறையாய் மேலுமந்த வுப்பைக்கொட்டிக் கணக்குடனே மேற்சட்டித் தன்னைமூடி, மெய்முறையாய்ச் சட்டிக்குச் சீலையப்பா மேன்மையுடன் செய்துமல்லோ ரவியிற்போடே. 830

போடவே சீலையது காய்ந்தபின்பு போற்றமுடன் மனேன்மணியாள் கிருபையாலே, நீடவே காலாங்கிதமை நினைத்து நீடூழிகாலம் வரையிருப்பதற்கு, கூடவே சித்தர் முனி ரிஷிகள்பாதங் கும்பிட்டுயடியேனை மிகத்தொழுது மூடவே வாலுகையாமேந்திரத்தால் முடிமீதில் தானிருத்தி யெரித்திடாயே. 831

எரிக்கையிலே கமதமென்ற சிறுதீயப்பா யென்மகனே அறுநாள்யெரி நேரப்பா, கரிகியல்லோ வுப்பெல்லாங் கறுத்துக்காணும், கனகமென்ற செம்பதுவு மக்கியல்லோ

நொரிக்கியே சரக்குடனே செம்புசேர்ந்து நொடிதான
வீரத்துக்காரமேறி, பரிக்கியே வுட்கொண்டு காரசாரம்
பாங்குடனே யேறியல்லோ சிவக்குந்தானே. 832

தானான செந்தூரமென்ன சொல்வேன் தகைமை
பெறத்தானெடுத்து சீஷாவிற்றான், கோனான குருபதத்தை
நணுகியேதான் கொற்றவனே தானெடுத்து வைத்துக்
கொண்டு, வேனான வெள்ளிசெம்பில் நூற்றுக்கொன்று
விபரமுடன் றானுருக்கி வூதிப்பாரு, பானான மாற்றதுவும்
யெட்டதாகும் பசுந்தங்கம் போலிருக்கும் பண்புதானே.

பண்பான பொன்னதுவும் பத்துக்கொன்று பான்மை
பெறத் தங்கமது வொன்றுசேர்த்து, திண்பான தகடடித்
துப் புடத்தைப்போடு தெளிவான தங்கமது பிறவியாச்சு
வண்பானதங்கமது லோகமெய்ச்சும் வாய்க்காது கருமி
கட்கு வாய்க்குமோசொல், நண்பான சித்தர்முனி ரிஷிகட்
கப்பா நலமுடனே வணங்கியல்லோ வேதைவாங்கெ.

வாங்கவென்றால் குருமொழியை மனதிலுன்னி
வாகுடனே யவர்வாசல் காத்திருந்து, தூங்காமலவர்
பணிக்கு தொண்டராகி துணையோடு கிட்டிருந்து யேவல்
செய்து, தாங்கியே யவர்பாத மர்ச்சித்தேதான் தாழ்மை
யுடன் கேள்விக்கு முதல்வனாக, ஏங்கியே யவர்முகத்தின்
முன்னேநின்று யெத்தொழிலுஞ் சோராமல் செய்யநன்றே.

குருவுபசாரம்

நன்றுடனே சதாகாலங் காத்திருந்து நலமுடனே
முடிவுநாள் வருகுமட்டும், சென்றல்லோ சமாதியிடஞ்
சென்றுநீயுஞ் செம்மைபெறத் திருப்பணிகள் மிகவுஞ்
செய்து, பற்றுடனே வாய்மொழிக்குப் பதிலுங்கூறுப்
பதிவாகப் பாத்திருந்து பேழைபோல, கொன்றைமலர்
தானெடுத்து வர்ச்சித்தேதான் கோடித்து சிவபதத்தில்
போற்றிநில்ல. 836

போற்றியே வஞ்சலிகள் மிகவுஞ்செய்து பொருந்தி
மனமொப்பதும் புண்ணாகமல், நேற்றியாய் மனதுவர
நடந்துகொண்டு நேர்ப்புடனே சகலகலை யறியவேதான்
கூற்றெனுங் காலனுக்கு விடங்கொடாமல் கூர்மையுடன்
சித்தர்களை வணங்கிநித்தம், தோற்றமுடன் சதாகாலம்
ரிஷிகள்தம்மைத் தொழுதுமிகவே பணிந்து வேதை
வாங்கே. 837

வேதைகளை வாங்கிநித்தஞ் சேர்த்துமென்ன வெகு
கோடி வாதவித்தைப் பாடிவிட்டார், போதையுடன் பாடி
விட்டாரென்று சொல்வார் பூதலத்தில் ரிஷிகோடி மகிமை
மெத்த, தீதையிலே சாத்திரங்கள் தெரியாமற்றான் சீர்

கெட்டு தலைகெட்டு பாடல்கெட்டு, பாதையிலே போகாமல்
துறையுங்கெட்டு பாழாகச் சுட்டுகெட்டா ரனந்தமாமே.

அனந்தமுடன் வேதைமுகஞ் செய்வாரப்பா அதினு
டைய நுட்பவழி காணாமற்றான், வனந்தனிலேதான்
திரிந்து மூலிதேடி வாகுடனே கெட்டவர்கள் லக்கோ
யில்லை, மனந்தனிலே நேர்ந்தமட்டும் செய்துபார்த்து
மார்க்கமுடன் சாக்கிறதை மறைத்தாரென்று, எனந்தனி
லேகும்பு கும்பலாகக் கூடியே ளிதங்கள் செய்தாரே
சண்டிமாடே. 839

மாடான மாடுகள்தான் காணப்போறார் மகத்தான
சித்தருடைகைமறைப்பை, கோடான கோடிபொரு ளிழந்து
விட்டார் குவலயத்தில் கெட்டுவிட்டுவீடுவிட்டு, கோடான
திரவியங்கள் யெல்லாந்தோர்த்து தெருத்திண்ணைப் பர
தேசி யாகிநின்றார், கூடான கூடுவிட்டுப் பாய்வே
னென்று கூக்குரலால் பேசியல்லோ பிழைப்பார்தானே.

தானான பிழைப்புக்கு இடமில்லாமல் தட்டழிந்து
கெட்டழிந்து தாறுமாறாய், கோனான் போலாடுதன்னை
தோளிலிட்டு வாடெங்கே யென்றுசொன்ன கதையைப்
போலே, தேனான சாத்திரத்தின், கருகாணாமல் தேங்கியே
கெட்டலைந்தார் கோடாகோடி, ஊனான தேகமது புண்ணு
மாகி வுடலழிந்து வுருண்டவர்க ளனேகந்தானே. 841

அனேகமுடன் மருந்துவகை செய்யுவார்கள் அப்
பனே சித்தர்களை நினைக்கமாட்டார், அனேகவித சாத்தி
ரத்தின் மருந்துசெய்வார் அந்நூலின் சித்தர்களைத்
துதிக்கமாட்டார், அனேகவித நூல்படியே மருந்துசெய்
வார் அக்காலஞ் சித்தர்களைத் துதிக்கமாட்டார், அனேக
வித முறைப்படியே மருந்துசெய்து வவரவர்கள் குரு
பதத்தை நினையார்தானே. 842

குரு நிந்தை சாபம்

நினையாத குருவென்ற நிந்தையாலே நீனிலத்தில்
சாபமது நேர்ந்துமேதான், தினையான மருந்துகள்தான்
பலிக்காமற்றான் திசைகெட்டுத் தடுமாறி தேங்கிநின்றான்
வினைபோல துன்பதுமிகவுமாகி மேதினில் அசுருண்டாய்
மாண்டுபோனார், மனைவிட்டு பொருள்தோற்று மாடு
தோற்று மனைவிமுதல் தானிழந்தார் சாபத்தாலே. 843

சாபமது வந்துமல்லோ நேருமப்பா சதாகாலஞ்
சித்தர்களை வணங்கிநித்தம், கோபமது வாராமல் வுள்ள
டங்கி குவலயத்திலிருந்து கொண்டுவரசனாக, பாபமது
விற்றுகன்று பூமானாக பாருலகில் வாழுவது தருமமப்பா,
தர்மமுடன் சதாகோடி சூரியன்போல் தாரணியில் வாழு
பவன் சித்தனாமே. 844

சித்தனா மென்றுசொல்லி மெய்ச்சுவர்பார் செகதலத் தில்யெனைப்போல நீயுமாவாய், பத்தனா யிருந்துகொண்டு பரமன்றன்னை பட்சமுடன் யெப்போதும் பாலித்தேதான், நித்தமுடன் குருபதத்தைப் போற்றிசெய்து நீடூழிகாலம் வரை யோகஞ்செய்து, முத்திபெற வழியுனக்குத் தெரியுங் கண்டீர் முயற்சியுடன் பலநூலும் பாருபாரே. 845

பாற்கையிலே சின்மயத்தின் பொருள்கள் தோன்றும் பாகுடனே யவரவர்கள் துறையுங்காணும், ஏர்க்கையிலே சுடரொளியின் பரிவுதோன்றும் யென்மகனே சூட்சாதி சூட்சங்காணும், காக்கையிலேகருவி கரணாதியெல்லாம் கண்ணுக்கு வொளியாகக் காணும்பாரு சேர்க்கையிலே வஷ்டாங்கங் காணலாகும் செகத்திலே சடாட்சரத்தை மேவிப்பாரே. 846

மேவுடனே வாராதாரங்கள் தோன்றும் வெளிக்கப் பால் முப்பாழுங்காணலாகும். பாவுடனே நிராமயத்தின் சோதிகாணும் பார்க்கையிலே சோதியது துலைவாய்த் தோற்றும், நாவுடனே வுள்மூலம் நடுக்கங்காணும் நடுக் கத்தால் தேகமது தலைகீழ்போலாம், தாவுடனே மூலாதா ரங்கப்பா தடுமாறிக் காணல்போல் தோற்றமாமே. 847

தோற்றமாம் சிகரத்தின் மகாரமிஞ்சும் தொகுப் புடனே மகாரத்தின் வசாரமிஞ்சும், கூற்றவாம் யகாரத் தில் வுகாரமிஞ்சும் குறிப்புடனே வுகாரத்தில் காரமிஞ்சும் தோற்றமாம் லகாரத்தில் ரகாரமிஞ்சும் சேர்ந்தவுடன் ரகாரத்தில் ழகாரமிஞ்சும், யேற்றமாம் ழகாரத்தில் னகார மிஞ்சும் யெளிதல்லோ சிவயோகிக் கெளிதிதானே. 848

வெடியுப்பு செந்தூரம்

எளிதான வின்னமொரு மாற்கம்பாரு ஏற்றமுள்ள வெடியுப்புநாலாங் காய்ச்சல், நெளிதான சேதுதான் வொன்றேயாகும் நேர்த்தியாய்ப் புளியுடனே காரமாகும் ஒளிவான தலையண்டம் பேரண்டந்தான் வுத்தமனே சேரி ரண்டு தூளதாக்கி, வளிவான சட்டி தனில் கீழேபோட்டு வளமாக வெடியுப்பை நடுவேவையே. 849

வைக்கவே மேலுமந்த மாவைகொட்டி வகையாகமேல் மூடி சீலைசெய்து, மெய்க்கவே ரவிதனிலே காயவைத்து மேன்மைபெற வாலுகையில் யெரிப்பாய்தானும், பொய்க் கவே நாற்சாம மெரித்தபோது போக்கான வுப்பதுவும் கட்டிநிற்கும், மொய்க்கவே சட்டிதனைத் திறந்துபாரு மோசமில்லை கட்டியது வுருக்கிப் போச்சே. 850

போச்சென்றுவிடுகாதே புண்ணியாகேள் போக்கான வெடியுப்பு வதீதமெத்த நீச்சென்று பேரண்டந்தன்னால்

தானும் நிலையாக மதியுப்புக் கட்டலாச்சு, மாச்சலென்ற வுப்பாலே சகலசித்து மாற்கமுடனுடலாங் கோடிவித்தை, பாச்சலுடன் துரைத்தனத்தார்க் கேற்றவுப்பு பாருலகில் ராஜர்வெல்லு முப்புமாச்சே. 851

உப்பான் வுப்பிதுதான் வீரமெத்த வுலகிலுள்ள வாதி கட்குகந்தவுப்பு, அப்பானசலமதிலே வளர்ந்தவுப்பு அதிலி ருந்து பிறந்துமல்லோ வெடியுப்பாச்ச, செப்பான செம்பு களிம்பூரல் போக்குந் தேசத்தில் சிறந்ததொருவுப்புமாச்சு, ஒப்பான வுப்பிதுக்கு வொன்றுமொவ்வா வுத்தமனே யிதுவோடும் வழியைக்கேளே. 852

கேளேதான் வுப்பதுவுங் கட்டிநின்றால் கெடியான வுப்பதுவு மெடுத்துமைந்தா, மாளவே நாகமொரு பலமே தூக்கு மகத்தானசூதமொரு பலமேதூக்கு, சூளவே வீர மொரு பலமேதூக்கு சுத்தமுள்ள சாரமது பலமேதூக்கு, மீளவே நாகரச மொன்றாய்ச் சேர்த்து மிகப்படவே தானு ருக்கி சாய்த்திடாயே. 853

சாய்த்திடவே சரக்கெல்லா மொன்றாய்ச் சேர்த்து சாங்கமுடன் றானரைப்பாய் நாலுசாமம், மாயவே காராசா ரத்தினாலே மாண்டுமே செயநீரு மாகும்பாரு, தோயவே செயநீரை மதியுப்புக்கு தொகுப்புடனே சுறுக்குமிடச் கட்டிப்போகும், காயவே வுப்புக்கு கவசங்கேளு கருவான வன்னமென்ற பேதியாமே. 854

பேதியாம் வளையலென்ற வுப்புமாகும் பேதமில்லை யெடைசரியா யெடுத்துக்கொண்டு, வாதியா மறுவகை செயநீர்தன்னால் மாட்டடா வெண்சாம மரைத்தபோது, சோதியா மெழுகதுவுஞ் சொல்லப்போமோ சூட்சடமுட னுப்புக்கு கவசஞ்செய்து, மேதியாங் கொம்பதனை சீவி மைந்தா மேன்மைபெற பொடியாக்கி செப்பக்கேளே. 855

செப்பவென்றால் வறுவகை செயநீரதனால் செழிப் புடனே நானரைப்பாய் தாலுசாமம், ஒப்பமுடன் றானரைத் துக் கவசஞ்செய்து வுத்தமனே ரவிதனிலே காயவைத்து சீலைசெய்து, தப்பறவே சட்டிதனில் மணலைக்கொட்டிச் சட்டமுடன் நடுமையம் வைத்துமைந்தா, மெப்புடனே மேலுமந்தமணலைக்கொட்டி மேன்மைபெற சட்டிகொண்டு சீலைசெய்யே. 856

சீலையுடன் ரவிதனிலே காயவைத்து சீர்பெறவே வாலுகையி லடுப்பிலேற்றி, காலையுடன் றானெரிப்பாய் சாமம்நாலு கடந்தபின்பு தீயாறிமற்றா நாள்தான், மாலை யிலேயெடுத்துப்பா சென்னசொல்வேன் மகத்தான செந்

தூரம் காந்திமெத்த, வாலையுடன்பூசை நைவேத்தியங்கள் வாகுடனே தான்செய்து எடுத்திடாயே. 857

எடுக்கவே செந்தூரம் பதனம்பண்ணு என்மகனே வெள்ளிதனில் பத்துக்கொன்று, கொடுக்கவே மாற்றதுவு மெட்டதாகும் குறையாது வாணிக்கு மேலேகாணும், துடுக்குடனே தகடடித்துப் புடத்தைப்போடு துகளற்ற பசுந்தங்கம் புகலப்போமோ, விடுக்கவே கடைதனிலே மாறியுன்ண விரைவான சமுசாறி கானதன்றே. 858

அன்றான வித்தையது அவனியோர்க்கு அப்பனே கிட்டாது யாருக்குந்தான், தன்றான விதியாளி வருவானால் தாரணியிலிந்த வித்தையவர்க்கே யெய்தும், பன்றான சாத்திரங்கள் படித்தாலென்ன பலநூலுந்துறைகொண்டு பார்த்துமென்ன, ஒன்றான குருபிரானரு ளிருந்தால் வுத்தமனே லபிக்குமடா புண்ணியோர்க்கே. 859

சுக்கான்கல் சுன்னம்

புண்ணியனு மின்னமொரு கருமானங்கேள் புகழான சித்தர்கள்தான் செய்யுமார்க்கம், திண்ணமுடன் சுக்கானின் கல்லையப்பா திறமுடனே சேரொன்று கொண்டு வந்து, வண்ணமுடன் வறுவகை செய்நீர்தன்னால் மாட்டடா எண்சாமம் சுருக்குதாக்கு, கண்ணனிட மூலியப்பா தன்னைவாங்கி கருவாக பொதிந்துமே கவசஞ்செய்யே.

செய்யவே சீலையது வேழுஞ்செய்து சிறப்புடனே ரவிதனிலே காயவைத்து, பையவேகெசபுடத்தில் மைந்தா கேளு பாங்காகப் புடம்போடச்சுண்ணமாகும், வெய்யவே சுண்ணமதை யெடுத்துக்கொண்டு விருப்பமுடன் ரவிதனிலே பத்துக்கொன்று, தொய்யவே தானுருக்கிகொடுத்துப்பாரு துறையான செம்பதுவு மூறல்போச்சே. 861

போச்சென்று விடுக்காதே புண்ணியாகேள் பொலிவான செம்பதுவுமூறலேகி, நீச்சென்ற சிலிம்பதுவுமிகவே நீங்கி நிலையான சொகுசுநிறம் தன்னிலொப்பாய், போச்சென்ற செம்பதுவு மொன்றேயாகும் பேரானதங்கமது வொன்றேயாகும், மாச்சென்ற யிரண்டுருவும் வொன்றாய்ச் சேர்த்து மகத்தான பொன்னிற மாகுந்தானே: 862

தானான பொன்னதுவு மாற்றுமாகும் சார்வாகப் புடத்துக்கு வுறுதிதங்கம், மானான தங்கமது பசுமைமெத்த மார்க்கமுடன் சித்தர்கள்தான் செய்யும்வேதை, பானான கருவாளி காண்பானாகில் படுமுன்னே சுக்கானைச் சுண்ணம்பண்ணி, தேனான சரக்குவகை யாவுங்கொன்று தேசத்தில் வாதிகட்கு குருவாவானே. 863

குருவான வாதிகட்கு வழியுஞ் சொல்வேன் குறிப்புடனே சமாதிக்கு நிலையுஞ்சொல்வேன், பருவானநீருக்குறியுஞ் சொல்வேன் பாரினிலே வயித்தியற் குணவுஞ் சொல்வனே், திருவான மூலிவகை போக்குசொல்வேன் றிரளானகற்பத்துக் குறுதிசொல்வான் முருவானசத்துருமித்துருவுஞ்சொல்வனே் முறையான சிமிட்டிவித்தைக் கருசொல்வேனே. 864

போகர் ஈடுமார்க்கம்

சொல்வானே மாணுக்கள் பிழைக்கவென்று சூட்சாதி சூட்சமெல்லாம் பிரித்துச்சொல்வேன், வெல்வான மின்னமொரு கருமானங்கேள் மிக்கான வதீதமென்ற வித்தைதன்னை, பல்வானே ஈடொன்று புகலக்கேளுநம் பொலுவான சீஷனுக்கு மைந்தாகேளு, நல்லதொரு செவ்வட்டை செம்பூநாகம் நலமான குழியானைப் பூச்சியாமே. 865

பூச்சியுடன் தம்பலமாம் பூச்சியாகும் புகழானபச்சோந்தி பிச்சுதானும், காச்சியென்னுங் கருங்குருவிபிச்சுதானும் கெவுரியுடபட்சியின் பிச்சுதானும், மாச்சியென்ற கழல்வேண்டு மொக்கசேர்த்து மகத்தான புனுகுடைய பச்சைபூரம், பாச்சென்ற கஸ்தூரி கோரோசனைதானும் பளிங்கான சுண்ணமென்ற காரமாமே. 866

காரமுடன் தேனுடனுன் கருவாலாட்டி காட்சியுடன் சிமிழ்தனிலே பதனம்பண்ணு, தீரமுடன்குளிகையொன்று செய்துகொண்டு திகட்டாதே வறுசுவையாங் தன்னோடொக்க, சாரமுடன் பலகாரம் வர்க்கந்தன்னில் சார்பாக கொடுத்துவிட மைந்தாபாரு, பாரமுடன் வுன்மீதிலெந்த நாளும் பட்சமுடன்வாழ்வதற்கு சொன்னோம்பாரே. 867

போகர் சித்திரரதம் நடத்தினது

பாரேதான் விநோதமென்ற வித்தையப்பா பாரிலுள்ள சித்தர்முனி ரிஷிகள்தானும், சீரேதான் மனமுவந்து வெங்தன்மீதில் சிறப்புடனே பட்சம்வைத்துக் காப்பதற்காய், மேரேதான் விண்ணுலகம் காண்பதற்கு மிக்கான தேரொன்று கட்டினேன்யான், நேரேதான் தங்கரதம் செய்தமாற்கம் நேர்ப்புடனே யாமுரைப்போம் போகர்தாமே. 868

தாமேதான் சக்கரமும்பதினாருகும் தக்கானயிரிசியது யெட்டதாகும், போமேதா னிடதுபுரம் கெஜமோநூறு பொங்கமுடன் வலதுபுரம் கெஜமோநூறு, வேமேதான் நெடுக்குபுரம் சக்கரமும்நாலு வெளியான குறுக்குபுரம் சக்கரமும்நாலு, தாமேதான் நடுமையம் சக்கரமுமெட்டு தாழ்வாக வுருளையென்ற இரிசியாமே. 869

இரிசியுடன் பாருமதுகெட்டதாகும் இணையானசட்ட
மது முப்பத்திரண்டு, குரிசியுடன் நெடுஞ்சட்ட மறுபத்து
நாலு குறுக்கான வுள்சட்டம் பதினொருமாகும், பரிசியுடன்
மேல்வட்டம் நூற்றிருபத்தெட்டு பாங்குடனே பழுதுகளு
மிருநூற்றன்பத்தாறு வரிசையுடனொன்றுக்குள் ளிழுத்து
மிகமாட்டி வலுமையுடனாணிகளு மிகப்பொதிந்து
மாட்டே. 870

மாட்டையிலே சக்கரத்திற் குருளையிருகம்பி மாருட்ட
மில்லாம லணியுடனேமாட்டி, கோட்டையிலே சுத்தி
யல்லோ வளயமுள்ளகம்பி குறுக்குமுதல் நெடுக்குமுதல்
குவிந்து முனைமட்டும், வாட்டமுடநடுவுருளை கொலுசுமிக
மாட்டி வார்புரத்தில் சக்கரத்தின் முளையோரமட்டும்,
நீட்டமுடன் றலைபக்கம் சக்கானிடகம்பிக நடுகம்பி புற
வட்டம் நிலைக்கமிக பூட்டே. 871

பூட்டையிலே தாளுடனேயிரிசி கம்பிமாட்டி புகழு
டனே நடுவட்டம் வட்டமத்தி, கூட்டமுடன் சட்டமது
வரிவரியாய்மாட்டி. கூர்மையுடன்சுழலாணி நடுவாணி
தன்னில், தேட்டமுட னஞ்சுருளை மிகப்பூட்டி தேர்மக்கி
யடிவாரம் பின்னலுடன் சட்டம், பூட்டகமாய் பலகையின்
மேலாணி மிகத்தாங்கி புகழ்பெறவே சுற்றோரம் கத்திரிப்
பாய் செய்யே. 872

செய்யவே கத்திரிப்பில் மணிகள்மிகமாட்டி சேர்ந்த
வடிவாரமது பலகைமிகப்பூட்டி, கொய்யவே வுஞ்சலது
போல மிகச்செய்து துப்புரதாய் மையூறுவாணிமிக
முடுக்கி, பையவே யிரிசிக்கு வுள்ளுருளைமாட்டி பாங்
குடனே வுள்ளாழி கடையாணிமாட்டி, மையவே சக்கர
மும் சுழலமிகச்செய்து மான்மையுடன் நீளமது சமைத்
திட்டேன்காண். 873

காணவே யடிவாரம் நங்கூரமுமாச்சு கயவானமேல்
வாரம் பீடமதுசொல்வோம், ஏணவே சட்டமது குத்துக்
கல்நூறு யெழிலாக குறுக்குவரை பத்துசட்டமாகும்,
பூணவே நெடுக்குவரை பத்துசட்டமாகும் புகலான
காலதுவு முப்பத்திரண்டு, தோணவே நடுக்கம்பி சோட
சமுமாகும், தோராதவுள்கம்பி வட்டமிமாமே. 874

அட்டமுடன் சட்டமது கெஜநீளம்பத்து அதன்மேலே
சிம்மாடுகட்டை யிருகெஜமாம், சட்டமுடன் மேல்வரை
துளைகளிருநூராம் சாங்கமுடன் துளைகளிலே கம்பிமிகச்
சொருகி, நெட்டமுடன் மேல்வரை வாணிகொண்டு
முடுக்கு நெடிதான யடிமட்டும் ஹூடுருகத்தாக்கி, குட்ட
மென்ற சட்டமது கீழ்ப்புரமும்நாட்டி குவலயத்தில்தாங்கு
கால்மிகக் கொண்டுசாத்தே. 875

சாத்தியே நாற்புரமும் வரிசையுடன் மாட்டிச் சர்வாங்
காலுடனே சட்டமொன்றுபூட்டி, ஏத்தியே நடுமையம்
திருகுசிம்மாடு யெழிலான சுற்றோரம்வளைய மிகச்செய்து,
சூத்திரமாம் சட்டமது பதினாறு சட்டம் சுழல்கின்ற சட்
டமது முப்பத்திரண்டு, நேத்தியுடன்றமைத்து நெடுவுஞ்
சல்போல நேர்மையுடன் செய்து விட்டேன் வின்னமிகக்
கேளே. 876

கேட்கவே மேற்சதுரம் வட்டமது பத்து கெடியான
சட்டமது குறுக்கு நெடுபத்து, சூட்சமுடன் மேற்சிகரம்
வட்டமது வஞ்சுருளான நடுச்சிகரம் வட்டமதுநாலு,
தாட்கவே மேல்வட்டம் நடுச்சிகரமூன்று தாழ்மையுடன்
மேல் வட்டம் நடுச்சிகரம்ரண்டு, தூட்கமுடன் சட்டநடுச்
சிகரம்வென்று துடிப்பானவுச்சியது கூர்மைமிகுவாமே.

மிகுவான கேரதுதான் சூட்சமிகமாட்டி மேன்மை
பெற சோடித்து வஞ்சுருனியாலே, தகுமான கொலுசு
டனே யொன்றோடொன்று வாய்சார்புடனே யிறுக்கி
யல்லோ சட்டமதில் பிகித்து, பிகுவான நடுவாணி தன்
னில் மிகமாட்டி பேரான காந்தமென்ற சத்துமிக பூசே.

பூசியே தேரிலுள்ள யிரும்புக் கெல்லாம் புகழான
காந்தத்தின் சத்தேயூட்டி, வாசியென்ற மேலாணி காந்த
வாணிவரையான கீழாணியிரும்புமாகும், மாசியென்ற
பலகையெல்லா சத்தேயாகும் மகத்தான யிரும்புடனே
காந்தஞ் சேரில் ஊசியென்ற காந்தமது சத்துதன்னால் வுய
றவே பறக்குமடாரதந் தான்பாரே, 879

பாரேதான் நாலுபுரம் குத்துகாலில் பாங்கான வாளி
யுடன் சிம்பமாகும், நேரேதான் புரவியது மாட்டிருக்கும்
நெடிதான பாதமது யிரும்பேயாகும், சீரேதான் சிற்சிவது
காந்தமாகும் சிறப்பான பீடமது முப்பத்திரண்டு, கூரே
தான் பீடமென்ற பலகைதன்னில் குருமுனியாஞ்சித்தர்
நமுமுனிவர்தாமே. 880

முனியான நவகோடி ரிஷிகள் தாமும் முனையான
சீனபதி செனங்களெல்லாம், தனியான சித்திரமாங் தேரி
லேற்றித் தாக்குடைய விமையகிரிபர்வதத்தில், பனியான
மேலவரை கொண்டு சென்று பாராதகாட்சி யெல்லாம்
பார்க்கவிட்டு, தொனியான வாத்தியங்கள் கேட்டும்
கோயில் தோற்றமுள்ள வடிவேலர் சேர்வை தானே. 881

சேர்வையாம் வடிவேலர் தன்னைக் கண்டார் சேனை
முதல் சரிசனங்கள் யாவும் பார்த்தார், பார்வையாம் சித்
தர் முனிரிஷிகள் தாமும் பட்சமுடனென்மீதில் கிருபை
கூர்ந்து, நேர்மையுடன் வரமெனக்கு யீந்தாரப்பா நெறி
யுடனே தேவரதம் நடத்தினேன் யான், கூர்மையுடன்

மலையோரம் சுத்தி வந்து குறிப்புடனே சீனபதியிறக்கிட் டேனே. 882

இறக்கவே சித்தர் முனிரிஷிகள் தாமும் யியலாக வென்மீதில் பட்சம்வைத்து, சிறக்கவே யெந்தனுக்கு விபதேசங்கள் சீராகத் தனைப்புகட்டிவிட்டாரப்பா, திறக் கவே சீனபதி மூன்று காதம் தெளிமையுள்ளவெள்ளை யென்ற செனங்களெல்லாம், பறக்கவே சித்திர ரதம் சூட் சாசூட்சம் பார்த்துமே பிர்மித்துமயங்கினரே. 883

மயங்கினரென்மீதிலிச்சை கொண்டார் மானிலத்தில் பெண்களெல்லாமோகமானார், தியங்கியே என்னிடத்தில் மோகித்தார்கள் திறளான பெண்களெல்லாஞ் சீனந்தன் னில், நயமுடனே நல்வார்த்தைப் பேசியே தான் நாட்டி லுள்ளவளப்பமெல்லா நன்காராய்ந்து, மயமுடனே தாமி ருந்தார் சீனந்தன்னில் மாகபதிபட்சமது யிருந்தார்பாரே.

இருந்தாரே பூரணமாஞ் சந்திரபட்சம் யெழிலுடனே தேவரதமுடுக்கியேதான், திருந்தமுடன் கடலேழுஞ்சுத்தி வந்தேன் திக்கெட்டில் வதிசயங்கள் யாவும் பார்த்தேன், பொருந்தவே வனந்திரத்தில் ரதமிறக்கிப் பொங்கமுடன வர்களாசிர்மத்தில், குருந்தமுடன் போனபின்பு யடியேன் குளிகைகொண்டு சீனபதி வந்திட்டேனே. 885

வந்திட்டேன் யிதிகாசவித்தையெல்லாம் வாகுடனே மாணுக்கள் பிழைக்கவென்று, தந்திட்டேன் காலாங்கிக் சிருபையாலே சதாகால முள்ள மட்டும் தரணிமீது, பங் திட்டவென்பேருதான் விளங்கபாலித்தேன் லோகத்து மாதர்க்காக, முந்திட்ட வித்தைகளும் கோடிவர்க்கம்முனை யாகக் காட்டிவிட்டேன் போகர்தாமே. 886

போகரென்ருல் வித்தையது பொய்யாதப்பா பொங்க முடன் சித்தர்கள் தான் வித்தையல்ல, சாபமுடன் சொல் வார்கள் முனிவர்சித்தர்கள் சார்பாகயான் சொல்வேயதீ தமாற்கம், தாபமுடன் காலாங்கிதனை வணங்கி சார்பாகச் செப்பிவிட்டேன் துறைகளெல்லாம், சேபமுடன் கருவாளி யாவாணுல் சுந்தரனே லபிக்குமடா புண்ணியவானே.

நாகக்களங்குசெந்தூரம்

புண்ணியனே வின்னமொரு கருமானங்கேள் புகலு கிறேன் நாகமென்ற செந்தூரந்தான், திண்ணமுடன் நாக மொரு பலமேவாங்கு திறமான செம்பதுவும் பலமோகால் தான், வண்ணமுடன் வயமதுவும் பலமோகால்தான்வகுப் பான வங்கமது பலமோகால்தான், நண்ணமுடன் தங்க மது பலமோகால்தான் நலமான ரசமதுவுப் பலமும் ரண்டே. 888

இரண்டான கெந்தியது பலமோரண்டு யெழிலான கானகமும் பலமோகால்தான், திரண்டான மனோசிலையும் பலமோகால்தான் திகழான வீரமது வராகன் ரண்டு, மாண்டான வளையலுப்பு விராகன் ரண்டுமகத்தான பூநீறு வராகன்ரண்டு, சுரண்டான விவையெல்லா மொன்ருய் கூட்டி சூட்சமுடன் குழியம்மி தன்னிலாட்டே. 889

ஆட்டவே கையானின் சாற்றினலே அப்பனேயெண் சாமமரைத்தபோது, நீட்டமுடன் வெண்ணெயதுபோலே யாட்டி நெடிதான ரவிதனிலே காயப்போடு, வாட்ட முடன் காய்ந்தபின்பு பொடியாதாக்கி வளமாகக் காசி யென்ற குப்பிதன்னில், தேட்டமுடன்தான் போட்டுமைந் தாகேளு தெளிவான மரக்கல்லால் கொண்டுமூடே. 890

மூடவேசீலையது வலுவாய்ச் செய்து முசியாமல் ரவி தனிலே காயவைத்து, நீடவே சட்டிதனில் மணலைக் கொட்டி நினைவாகச் சட்டிநடுகுப்பிவைத்து தேடவே வகுப்பியின் மேல் மணலைக் கொட்டி தெளிவாக சட்டி கொண்டு கவிழ்த்துமூடி, சாடவே சீலையது வலுவாய்ச் செய்து சாங்கமுடன் வாலுகையிலேற்றிடாயே. 891

ஏற்றவே கமலமென்ற தீயாலப்பா என்மகனே யெண் சாமம் யெரித்தாரப்பா, போற்றவே யாறிய பின்னெடுத் துப்பாரு பொங்கமுடன் செந்தூரம் சொல்லப்போமோ, வாற்றமென்ற செந்தூரம்பதனம் பண்ணுமகத்தான வேதையிது கோடாகோடி, நாற்றமென்ற செம்பதனில் நாலுக்கொன்று நலமுடனே தானுருக்கிக் கொடுத்துப் பாரே. 892

கொடுத்துப்பார் செப்பதவுமிரண்டு போகும் குணமா கும் வூரலது வடுத்துக்கொல்லும், தடுத்துமே கரியோட்டி லூதிப்போடு தாக்கான செம்பதுவும் சொகுசுமெத்த, தொடுத்துப்பார் செம்புதனை மதிநாலுக்கு துப்புரவாய் தானுருக்கியெடுத்துப்பாரு, விடுத்துப்பார் மாற்றதுவுமே ழதாகும் விரைவான பொன்னதுவும் பசுமைகாணே.

காணவே பொன்னென்றயேம மாச்சுகருவான தங்க மது வைந்துக்கொன்று, பூணவே தானுருக்கி யெடுத்துக் கொண்டு புகழாக தகடடித்துப் புடத்தைப்போடு, வேணவே பூங்காவிதன்னிலப்பா விருப்பமுடன் புடம் போடப் பசுமையாகும், மாணவே சித்தர்செய்யும் வேதை யாகும் மார்க்கமுடன் நாதாத்கள தீதந்தானே. 894

தானுன செந்தூரங்குன்றி யுண்ணு தயவுடனே வெண்ணை தனிலனுபானந்தான், வேனுன மண்டலந்தான் கொண்டபோது மிக்கானதேகமது கற்றூணாகும்,

கோனான குருவருளால் தேகம்பொன்னும் குவலயத்தில் கோடிவரை இருக்கலாகும், பானான காலாங்கி கிருபை தன்னால் பாடினேன் போகரிஷி பண்மைபாரே. 895

போகர் மாற்றுயர்வுவேதை

பண்மையாமின்னமொரு கருமானங்கேள் பாங்கான சாரமது பலம்நாலாகும், திண்மையாங் கெந்தியது பலமைந்தாகும் திடமானவெண்காரம் பலம்ரண்டாகும், விண்மையாம்பூரமது பலம்ரண்டாகும் வகுப்பான வீரமது பலமொன்றாகும், கண்மையாம் சரக்கெல்லாம் மொன்றாய்க் கூட்டிக் களிம்புபோல் தானரைப்பாய் சாமம் பத்தே. 896

பத்தானசாமமது யரைப்பாயப்பா பாங்குடனேவாடு தின்னாப் பாலைமூலி, சித்தான சித்தருட மூலியப்பா செகத்திலே தானறிவார் மாண்பர் தாமும், முத்தான நிழல்தனிலேகாயவைத்து முசியாமல் சீஷாவிலடைத்துக்கொண்டு, சுத்தான புட்டிக்குச் சீலைசெய்து சுத்தமுடன் மண்மறைவில் தயிலம்வாங்கே. 897

வாங்கியே தயிலமது பதனம்பண்ணு வாகுடனே தயிலமதை யெடுத்து மைந்தா, பாங்கு பெறவாருமாற்றாணிக்கொப்பால் பசும் பொன்னும் விராகனது தகடடித்து, தீங்கில்லாத் தயிலமது குன்றிதானும் திகழாகத்தானெடுத்துப் பூசிமைந்தா, ஏங்கியே திரியாதேபுடத்தைப்போடு யெழிலான பொன்னதுவுமாற்றுப் பாரே. 898

மாற்றான பொன்னதுவும் பசுமைத் தங்க மகத்தான நாதாக்கள் வேதைகாணும், காற்றான தயிலமது காரமெத்தக் கடுங்காரச்செயநீரு மிதுக்கீடுண்டோ, சேற்றான துருத்தியது பிழைப்பதற்கு சூட்சமுடன் சித்தர்முனி செய்யும் வேதை, வேற்றான மாந்தர்கட்கு யிந்தமார்க்கம் வெளியாகத் தாமுரைத்தோம் வண்மையாமே. 899

மாற்றுயர்வுவேதை

வண்மையாமின்னமொரு கருமானங்கேள் மார்க்கமுடன் நாதாக்களதீதவித்தை உண்மையுடன் சொல்லுகிறேன் மைந்தா பாரு உவப்பான கல்லுப்பு பலமோகால்தான், திண்மையுடன் மதியுப்பு பலமோகால்தான திறமான துருசதுவும் பலமோகால்தான், நன்மைபெறசாரமது யலமோகால்தான் நலமான சாரமது பலங்கால்கூட்டே.

கூட்டவேலிங்கமது பலமோகால்தான் குணமான பூநீறு பலமோ கால்தான், வாட்டமுடன் சீனமது பலமோ கால்தான் வகுப்பான துத்தமது பலமோகால்தான், காட்ட

முடன் சாரமென்ற செயநீர்தன்னால் நலம்பெறவே தானரைப்பாம் பத்துசாகம், நீட்டமுடன் யாறுமாற்றாணிக்கொப்பாய் நேரான பசும்பொன்னு தகடதாக்கே. 901

தகடான ரேக்கதனை யெடுத்துமைந்தா தண்மைபெற மெழுகதனை தகட்டிற்பூசி, நிகடான மெழுகதனைப் பூசியல்லோ நேர்ப்புடனே பூங்காவிக்குள்ளேபோடு, சகடான செம்பதுவுங் கட்டியேதான் சார்பான தங்கமதுவாகும் பாரு, பகடான மாற்றுவகை கூறப்போமோ பசுந்தங்கயிதுக்கீடு சொல்லொண்ணாதே. 902

சொல்லவென்றால் நாவேது பாவுமேது சுருதிமுதல் யாராய்ந்து படித்துமென்ன, வெல்லவே சித்தர்கள் கைமறைப்பு மேதினியிலாராலுங் காணப்போமோ, புல்லவே காலாங்கி நாதர்பாதம் போற்றியே சதாகாலம் பணிந்துநித்தம், நல்லவே மானிடர்கள் பிழைக்கவென்று நாட்டினேன் போகரிஷி நவிலத்தானே. 903

வெள்வங்கக் களங்கு

நவிலவே போகரிஷி சொல்லுமாற்கம் நாட்டுளோர் கருவாளி காண்பான்பாரு, புவிலவே வின்னமொரு கருமானங்கேள் புகழானவெள்வங்கம் பலமொன்றாகும், கவிலவே பாஷாணம் பலமொன்றாகும் கடிதான வயமதுவுந் தூளேகாலாம் தவிலவே ரசமதுவும்பலங் காலாகும் தாழ்மையுடன் றானரைப்பாய் சாமம்நாலே. 904

நாலான சாமமது வரைக்கும்போது நலமானமெழுகதுபோ லாகும்பாரு, பாலான தேனதுவு மிரண்டுசாமம் பாகமுடன் றானரைப்பாய் மைபோலாக, வேலான பசுநெய்பால் சாமம்நாலு மிக்கானவெண்காரம் பொரித்துப்போடு, கோலான கரண்டியினால்க் கிண்டிக்கொண்டு கொப்பனவே வச்சிரமாங் குகையிற்போடே. 905

போடவே சீலையது வலுவாய்ச்செய்து பொங்கமுடன் ரவிதனிலே காயவைத்து, நீடவே குகைதனிலே யுருக்கியேதான் நிலையான களங்குதனை யுடைத்துப்பாரு, நாடவே களங்குதனை சொல்லப்போமோ நாதாக்கள் செய்யுமிதுவதீதமாற்கம், கூடவே களங்குதனையெடுத்துக்கொண்டு குமுறவே வெள்ளிசெம்பில் பத்துக்கொன்றே. 906

பத்தான யிடைதனிலே குருவொன்றீய்ந்து பதமாகத் தானெடுத்து வூதிப்போடு, புத்தான களங்கதுவும் நீங்கியல்லோ புகழானவெள்ளியது மாற்றுகாணும், மத்தான வெள்ளியது பசுமைமெத்த மகத்தானமட்டமது நாலுக்கொன்று, சித்தான தங்கமது வொன்றுகூட்டித் தெளிவாக வாரடித்துப் புடத்தைப்போடே. 907